பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 08, வியாழக்கிழமை 22.06.2017 | கதிர் 228

## யாழ். நீதிமன்றின் மரணதண்டனை தீர்ப்பு தள்ளுபடி

பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஒருவர் இழைத்த குற்றத்துக்காக அவருக்கு மரணதண்டனை வழங்கிய யாழ். மேல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்திருக்கின்றது. பக்கம் 18 >>>

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை பெயர் குறிப்பிடாமல் சாடல்

# மக்களைப் பகைக்க வைக்க அரசியல் கோமாளிகள் முயற்சி



## நாடாளுமன்றத்தில் சம்பந்தன் காட்டம்

கொழும்பு, ஜூன் 22

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு முற்போக்கான கட்சி. சகல மக்களும் ஒன்றாக சம அந்தஸ்துடனும், நீதியான சூழலிலும் வாழ வேண்டும் என நாம் விரும்புகிறோம். எனினும் மக்கள் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டு இருக்க வேண்டும் என எமது பிரதேசங்களில் உள்ள ஒருசில அரசியல் கோமாளிகள் விரும்புகின்றனர்."

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார் எதிர்க் கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரையே பெயர் குறிப்பிடாமல் அவர் இவ்வாறு சுட்டினார் என்பது அவரது உரையில் வெளிப்பட்டது. பக்கம் 03 >>>

## இரு புதிய அமைச்சுக்களை முதல்வர் பொறுப்பேற்றார்



யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர் ஆகிய பதவிகளில் இருந்த குருகுலராஜா, பொ.ஐங்கரநேசன் ஆகியோர் பக்கம் 18 >>>

## குற்றம் இழைத்தோர் படையினர் எனத் தெரிந்தும் நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் தயங்குகின்றீர்கள்?



### நேற்று நாடாளுமன்றில் சரா எம்.பி. சீற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் குற்றம் இழைத்தோர் படையினர் என்று தெரிந்தும் உரிய நடவடிக்கையை எடுப்பதற்கு ஏன் தயங்குகின்றீர்கள்?

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் காட்டமாகக் கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான ஈ.சரவணபவன். பக்கம் 03 >>>

அஸ்பு அருணாசலம்



முடிஞ்சது முதல் இன்னிங்ஸ்தான் பாருங்கோ...!

## நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று திரும்பப் பெறப்பட்டது



யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கடந்த 14 ஆம் திகதி இரவு ஆளுநர் ரெஜினோல்ட் குரேயிடம் தாங்கள் கையளித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை இலங்கைத் பக்கம் 18 >>>

## காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்கான ஆணையாளர்களை நியமிக்கத் தாமதம் ஏன்?




### நாடாளுமன்றத்தில் சுமந்திரன் நேற்றுக் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 22

"காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்துக்கான ஆணையாளர் ஏழு பேரை அரசமைப்புக் கவுன்ஸிலே நியமிக்க வேண்டும். அந்த நடவடிக்கை எடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றமை ஏன்?" பக்கம் 18 >>>

## பல்கலை. மாணவர்கள் 96 பேர் ஆஸ்பத்திரியில்

### கொழும்பில் பேரணி நடத்தியோர் நீர்த்தாரை, தடியடி மூலம் கலைப்பு



கொழும்பு, ஜூன் 22

மாலபேதனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸார் தண்ணீர்த் தாரை பிரயோகம் மற்றும் தடியடித் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் 91 மாணவர்களும் ஐந்து பொலிஸாரும் காயமடைந்தனர்.

கொழும்பு நகர மண்டபப் பகுதியில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி பக்கம் 18 >>>

## சுமுக நிலைமை ஏற்பட்டமை மகிழ்ச்சி என்கிறார் முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூன் 22

பல்வேறு பிரச்சினைகள் உருவான பின்னர் சுமுக நிலைமை ஏற்பட்டிருப்பதுடன் பிரச்சினைகள் இணக்கமாகத் தீர்க்கப்பட்டிருக்கின்றமை மகிழ்ச்சிக்குரியது என வடக்கு முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று மாலை நேரம் பக்கம் 18 >>>

## ஞானசாரர் மூன்று தடவைகள் நேற்றுக் கைதாகிப் பிணையில்!



கொழும்பு, ஜூன் 22

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் கடந்த சில வாரங்களாகத் தலைமறைவாகியிருந்த பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் வண கலகொட அத்த ஞானசார தேரா நேற்று கொழும்புக் கோட்டை நீதிவான் நீதி பக்கம் 18 >>>

## மாகாண அமைச்சரவையின் கூட்டம் சுமுகமாக நடந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடக்கு மாகாண சபையில் கடந்த சில நாள்களாக இடம் பெற்ற அரசியல் குழப்பங்கள் நேற்று முடிவுக்கு வந்தமையை அடுத்து அமைச்சர்கள் வாரியக் கூட்டம் நேற்று மாலை 5.30 மணி தொடக்கம் 6.45 மணி வரை கைதடியிலுள்ள மாகாண சபை அலுவலகத்தில் மிகவும் சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றது. பக்கம் 18 >>>

# வடக்கு, கிழக்கை கண்ணிவெடிகளற்ற மாகாணங்களாக மாற்ற நடவடிக்கை

## மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் கருத்து



வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிலக்கண்ணிவெடிகளற்ற மாகாணங்களாக மாற்றி, மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இலங்கையில் இதுவரையில் 12 லட்சத்து 76 ஆயிரத்து 898 நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தை நிலக் கண்ணிவெடி அபாயமற்றது என்று அறிவிக்கும் கூட்டம், மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிலக் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக இதுவரையில் இலங்கை அரசு 400 கோடி ரூபாவையும், வெளிநாட்டு நிறுவனங்கள் ஆயிரம் கோடி ரூபாவையும் செலவிட்டுள்ளன என்று அவர் கூறினார்.

இலங்கையில் 160 சதுர கிலோமீற்றர் பகுதியில் நிலக் கண்ணிவெடிகள் பரவி உள்ளன என்று அடையாளம் காணப்பட்டமையுடன், நிலக் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட நிலப் பரப்பில் 134 சதுர கிலோ மீற்றர் பகுதி நிலக் கண்ணி வெடிகளற்ற அபாயமற்ற பகுதியாக மாற்றப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அங்கு மக்களின் மீள்குடியேற்றம், வியாபார நடவடிக்கை, விவசாயச் செய்கை உள்ளிட்டவற்றை மீளக்கட்டியெழுப்புவதற்கு இது வழி வகுத்துள்ளது.

தேசிய நிலக் கண்ணிவெடி நடவடிக்கை மத்திய நிலையம் இன்று மாவட்டத்துக்கு மாவட்டம் என்ற தொனிப் பொருளின் கீழ், நிலக்கண்ணிவெடிகள் அகற்றும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிலக் கண்ணிவெடிகள் அகற்றும் பணிக்கு இலங்கை இராணுவத்தினரின் மனிதாபிமான நிலக்கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பெரிய பங்களிப்பை வழங்குகின்றன.

அத்துடன் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிக்கு அமெரிக்கா, கனடா, ஜப்பான், பிரிட்டன், ஆஸ்திரேலியா, இந்தியா, நோர்வே, ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து, சீனா, ரஷ்யா போன்ற நாடுகளும் பல்வேறு வழிகளிலும் உதவி செய்துள்ளன. இது தொடர்பான தொழில்நுட்ப ரீதியான பயிற்சி மற்றும் ஆலோசனையையும் அவை வழங்கியுள்ளன' என்றார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் திருகோணமலை, அம்பாறை, அநுராதபுரம் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்ட 27.3 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட பிரதேசங்கள் இன்னும் நிலக் கண்ணிவெடிகள் பரம்பியுள்ள பகுதிகளாகக் காணப்படுகின்றன.

எதிர்வரும் 3 வருடங்களில் அவற்றை அகற்றும் பணி பூர்த்தி செய்யப்பட்டு, 2020 ஆம் ஆண்டளவில் இலங்கையை நிலக் கண்ணிவெடிகள் அபாயமற்ற ஒரு நாடாக மாற்றுவதே அரசின் நோக்கமாகும்.-என்றார். (எ)

## ஆலய மஹோற்சவங்கள்

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறும். நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும்.

* * *

அச்சுவேலி ஆவரங்கால் பார்வதவர்த்தனி அம்மை சமேத நடராஜ இராமலிங்க சுவாமிகள் கோயில் வருடாந்தத் திருவிழா நேற்றுப் புதனகிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும், 28 ஆம் திகதி புதன்கிழமை சப்பை ரதத் திருவிழாவும், மறு நாள் வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## கால நீடிப்பு

சைவ சமய விவகாரக் குழுவினால் வருடந்தோறும் நல்லூர் உற்சவ காலத்தில் வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டுக்கான ஆக்கங்கள் கோரப்படும் இறுதித் திகதியும், பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை விண்ணப் பத்துக்கான முடிவு திகதியும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாநாகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ)

## குருநகரில் நடமாடும் சேவை

யாழ்.பிரதேச செயலகப் பிரிவினரால் குருநகர் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அடையாள அட்டை இல்லாதவர்களுக்கான விசேட நடமாடும் சேவை இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

## போக்குவரத்துத்துறையில் புரட்சி; கொழும்பு நகருக்குள் படகுச்சேவை

### ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாம் நகர அபிவிருத்தி அமைச்சு!

கொழும்பு, ஜூன் 22

கொழும்பு நகருக்குள் போக்குவரத்து படகுச்சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு நகர அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக, முதலீட்டாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன என்று அந்த அமைச்சை மேற்கோள்காட்டி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, மட்டக்குளி - வெள்ளவத்தை, வெள்ளவத்தை - பத்தரமுல்லை, கொழும்பு - ஹங்வெள ஆகிய நகரங்களுக்கு இடையில் இந்தப் போக்குவரத்து படகுச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

தினமும் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு நகர் அதன் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள ஏரிகள் மற்றும் கால்வாய்களைப் பயன்படுத்தி இந்தப் போக்குப் வரத்து படகுச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்மூலம் கொழும்பு நகரில் ஏற்படும் வாகன நெரிசலை பெரியளவில் கட்டுப்படுத்த முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## திருமலையில் பல்கலைக்கழக கல்லூரி அங்கீகாரம் வழங்கியது அமைச்சரவை

திருகோணமலை மாவட்ட மாணவர்களின் நன்மை கருதி திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேசத்தில் பல்கலைக்கழக கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திருகோணமலையில் பல்கலைக்கழக கல்லூரியை நிறுவுவது தொடர்பில் திறன்விருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சர் சந்திம வீரக்கொடி யோசனை முன்வைத்திருந்தார்.

அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், 4 கோடி 34 லட்சம் ரூபா செலவில் அந்த பல்கலைக்கழக கல்லூரி நிர்மாணிக்கப்பட உள்ளது.-என்றார். (எ)

## புத்தளத்தில் விபத்து; இளைஞன் பலி

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கரம்பை- உடப்பு பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞன் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சிறிய ரக லொறி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியமையால் இந்த விபத்து சம்பவித்திருந்தது.

இதில் கொத்தாந்தீவைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முல்லைத்தீவில் இலவச எச்.ஐ.வி. பரிசோதனை

முல்லைத்தீவு மாவட்டம் தழுவிய ரீதியில் எதிர்வரும் 27 ஆம் திகதி எச்.ஐ.வி. தொடர்பான இலவச பரிசோதனை இடம்பெறவுள்ளது. எனவே, மக்கள் இதில் கலந்துகொண்டு பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தயாளசீலன் பூங்கோதை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எச்.ஐ.வி. தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகச் சந்திப்பு ஒன்று நேற்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (எ-81)

## ஐ.நா.இளைஞர் விவகார தூதுவராக இலங்கையர்




ஐக்கிய நாடுகளின் இளைஞர் விவகாரங்களுக்கான தூதுவராக இலங்கையரான ஜயத்மா விக்கிரமநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அந்தோனியோ குத்தரெஸ் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

2030 ஆம் ஆண்டளவில் ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி கொள்கையை வெற்றிகரமான முறையில் நடைமுறைப்படுத்த இளைஞர் சமூகத்தை வலுவூட்டும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜயத்மா விக்கிரமநாயக்க தனது 21 ஆவது வயதில் முதல் சர்வதேச மட்டத்திலான இளைஞர் அபிவிருத்திப் பணிகளை பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறார். அவர் இலங்கை நிர்வாக சேவையின் அதிகாரியாகவும் பணியாற்றுகிறார். (எ)

காலைக்கதிர் Kalaikkathir



## மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றத்தில் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தைக்கையாள்வதற்கான அலுவலகத்தை நிறுவுவது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பினர்' என்றும் –

'2010 மற்றும் 2015 பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டுத் தோற்றவர்கள்' என்றும் –

பெயர் குறிப்பிடாமல் தமிழ் தேசிய மக்கள் முன்னணியையே அவர் சாடினார் என்றும் நாடாளுமன்றச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகத்தை ஸ்தாபிக்கும் சட்டம் தற்போது வரையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. அதனையிட்டு நாம் கவலை அடைகின்றோம்.

### கொலைக் குற்றம்

ஒருவர் காணாமலாக்கப்படுவது குற்றம் என்பதற்கு அப்பால் அது கொலைக் குற்றமுமாகும். ஒருவர் கொலை செய்யப்படும் போது கொலை செய்யப்பட்டார் என்பதை தெளிவாக அறிந்து கொள்ள முடியும். அதன் பிரகாரம் அதற்குக் காரணமானவரை சட்டரீதியாக தண்டிக்கலாம்.

ஆனால் ஒருவர் காணாமலாக்கப்படும் போது அதற்கு காரணமானவரை அறிந்து கொள்வதில் சிக்கல்கள் காணப்படுகின்றன. அவ்வாறு காணமலாக்கப்பட்ட சம்பவங்களுக்கு காரணமானவர்களை அறிவதற்காகவே இந்த சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று கோருகின்றோம்.

வடக்கு, கிழக்கில் 20ஆயிரம் பேர் காணாமலாக்கப்பட்டுள்ளனர் என ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியம் அளித்துள்ளனர். இராணுவத் தரப்பில் 5 ஆயிரம் பேர் காணமல்போனார்கள் என்றும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

சிவிலியன்களாக இருக்கலாம், இராணுவத்தினராக இருக்கலாம், காணமல்போனவர்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் குறித்த உண்மைகளைக் கண்டறியப்பட வேண்டும்.

### பல தடவைகள் வலியுறுத்தினோம்

காணாமல்போனவர்கள் தொடர்பாக ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னதாகவே, இந்தச் சபையில் பல தடவைகளில் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் என்று நாம் சுட்டிக்காட்டினோம். அரச தலைவர்களுடன் கலந்துரையாடினோம்.

சர்வதேச தரப்பினர்களுடன் கலந்துரையாடி வலியுறுத்தல்களைச் செய்தோம். ஆனால் தற்போது வரையில் எதுவும் நடைபெறவில்லை. தாமதம் காணப்படுகின்றது.

உறவுகள் காணாமலாக்கப்பட்டமை பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் அலுவலகம் கொழும்பில் அமையப்போகின்றது. இந்த அலுவலகம் வடமாகாணத்தில் அமைய வேண்டும். விசேடமாக வன்னி பிரதேசத்துக்கு – வவுனியாவில், கிளிநொச்சியில் – இந்த அலுவலகம் வேண்டும் என்று கோருகின்றோம்.

இந்தச் சட்டம் எப்போது அமுலுக்கு வரும் என்று கூறப்படவில்லை. இதற்கான அமைச்சர் இன்னமும் இனங்காணப்படவில்லை. ஆகவே அந்த விடயங்களில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்திற்கு நியமிக்கப்படுபவர்கள் அது தொடர்பான அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும். இந்த அலுவலகத்திற்கு வருகை தருபவர்களுக்கு வேண்டிய உள ஆலோசனைகள், இழப்பீடுகள் வழங்குவதற்குரிய மனநிலை உடையவர்களாக இருக்கவேண்டும்.

முறைப்பாட்டாளர்களின் கூற்றுக்கு அமைவாக வேண்டிய இடங்களில் சென்று விசாரணைகளை மேற்கொள்பவர்களாகவும் ஒருவேளை அவர்கள் புதைக்கப்பட்டு விட்டார்கள் என்றால் அங்கு சென்று கூட நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

### இந்த அலுவலகம் அமைவதின் நோக்கம்

காணாமலாக்கப்பட்டவர்கள் விடயம் குறித்து நாம் அரசாங்கத்திற்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை என்று எமது மக்களில் ஒரு பகுதியினர் குறிப்பிடுகின்றனர்.

உண்மையிலேயே நாம் பல்வேறு வலியுறுத்தல்களை செய்தும் அவை தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமைக்கு இரண்டு காரணம் காணப்படலாம்.

தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படும் என்பது ஒன்றாகும். மற்றையது விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடிய இராணுவத்தினர் சட்டத்திற்கு முன்னால் நிறுத்தப் படுவார்கள் என்ற பிரசாரம் கூட்டு எதிர்க்கட்சியினரால் குற்றச்சாட்டாக வருகின்றமையும் ஆகும்.

அவ்வாறான கருத்தில் எவ்வித மான உண்மையும் இல்லை. உண்மையிலேயே காணாமலாக்கப்பட்ட உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதே இந்த அலுவலகத்தை உருவாக்குவதற்கான பிரதான நோக்கமானதாகும்.

### நிராகரிக்கப்பட்ட தரப்புகள்

அரசாங்கத்தின் செயற்பாடுகளில் காணப்படும் கால தாமதங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழுத்தம் கொடுப்பதில்லையென்ற நிலைப்பாடு எமது சமூகத்தின் ஒரு பகுதியில் காணப்படுகிறது.

மக்களால் நிராகரிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான தரப்பினர் இதற்கான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் 2010ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தனர். 2015ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியடைந்தனர். இனி நடக்கப் போகும் தேர்தலிலும் அவர்கள் நிச்சயம் தோல்வியடைவார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்போக்கான கட்சியாகும். அதனைக் கூறுவதில் நான் பெருமையடைகிறேன். சகல மக்களும் ஒன்றாக சம அந்தஸ்துடனும், நீதியான சூழலிலும் வாழ வேண்டும். எனவே நாம் விரும்புகின்றோம்.

எனினும், மக்கள் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டு இருக்க வேண்டும் என எமது பிரதேசங்களில் உள்ள சில அரசியல் கோமாளிகள் விரும்புகின்றனர்.

சமாதானமான நாட்டில், தமிழ் மக்களின் பகுதிகளில் சுயாட்சிக்கான நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமாகும்.

எனினும், நாட்டில் குழப்பம் இருக்க வேண்டும் என்பது அவர்களின் நோக்கம்.

தமது அரசியல் நிலைப்புக்காக அவர்கள் குழப்பம் ஏற்பட வேண்டுமென விரும்புகின்றார்கள். இதற்கு இடமளிக்கும் வகையில் அரசாங்கம் தனது உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் மேலும் கால தாமதங்களைச் செய்யக்கூடாது. – என்றார்.

## குற்றம்...

(முதாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தை நிறுவுவது தொடர்பான சட்ட மூலத் திருத்தத்தின் மீது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேட்டார்.

இந்திய அமைதி காக்கும் படை வடக்கு, கிழக்கில் நிலை கொண்டிருந்த சமயம் இங்கு இந்தியப் படைகளாலும், ஒட்டுக் குழுக்களினாலும் ஆள்கள் காணாமலாக்கப்பட்டமை குறித்தும் அவர் பிரஸ்தாபித்தார்.

இந்த உரையில் அவர் கூறியவை வருமாறு :-

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை தமிழ் மக்களின் வாழ்வுடன் இரண்டறக் கலந்து விட்ட விடயமாக கடந்த மூன்று தசாப்தமாக இருந்து வருகின்றது. 1983 ஆம் ஆண்டு சிங்களப் பேரினவாதிகளால் இந்தத் தீவில் நிகழ்த்தப்பட்ட இனக் கலவரத்தில் தொடங்கிய காணாமல் ஆக்கப்படுதல் விவகாரம், 2009ஆம் ஆண்டு இறுதிப் போர் முடிவடையும் வரையில் நீண்டுள்ளது.

### இந்திய இராணுவம்

1987ஆம் ஆண்டு அமைதி காக்கும் படை என்ற பெயரில், இந்திய இராணுவம் வடக்கு – கிழக்குப் பிரதேசத்தில் கால் பதித்தது. இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த 1987ஆம் ஆண்டுதொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் காணாமல் ஆக்கப்படுதல்கள் இடம்பெற்றன. இந்திய இராணுவத்தினராலும், அவர்களுடன் சேர்ந்து இயங்கிய தமிழ் ஒட்டுக் குழுக்களினாலும் பலர் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டனர்.

27 ஆண்டுகள் கடந்தும் அவர்கள் வீடு திரும்பவில்லை. இந்திய இராணுவமோ அல்லது அவர்களுடன் சேர்ந்து இயங்கிய தமிழ் ஒட்டுக் குழுக்களோ இதற்கு இன்று வரையில் பொறுப்புக் கூறவில்லை. இந்தக் காலத்தில் கடத்தப்பட்டவர்கள் தொடர்பில், முன்னைய ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் விசாரணை ஆணைக்குழு முன்பாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

### இலங்கை இராணுவம்

இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாடு கொண்டு வரப்பட்டது. சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையிலான காலப் பகுதியில், குடா நாட்டில் இருந்த இளையோர் பலர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டார்கள்.

சுற்றிவளைப்புக்கள் என்ற பெயரில் இளையோரைச் சந்தேகத்தில் கைது செய்து கொண்டு சென்ற இராணுவத்தினர் அவர்களை இன்றுவரை விடுவிக்கவில்லை. இதே சம காலப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்து தமிழ் ஆயுதக் குழுக்கள் பல ஒட்டுக் குழுக்களாக இயங்கின. இவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களே.

### சந்திரிகா காலம்

அதேவேளை, இந்தக் காலப் பகுதியில் நாட்டின் தலைவியாக விளங்கியவர் சந்திரிகா அம்மையார். இப்போது தேசிய ஒருமைப் பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவியாகவும் இருக்கின்றார். பொறுப்பான பதவியில் இப்போது இருக்கின்ற இவரும், தனது காலத்தில் நடைபெற்ற காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவரே.

### மஹிந்தவின் ஆட்சி

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டுவரையில் யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் மிக அதிகம். இராணுவ ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட இரவு வேளையிலேயே காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் நடந்தன.

இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கிய ஒட்டுக் குழுவான ஈ.பி.டி.பியினருக்கு இந்தக் கடத்தல்களுடன் நேரடித் தொடர்பு இருப்பதாக, மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பதிவுத் தகவல்கள் அடிப்படையில் 450 பேர் வரையில் இந்தக் காலப் பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இறுதிப் போர்

மிக மோசமான காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் இறுதிப் போரின் முடிவிலேயே இடம் பெற்றது. போர் முடிவுக்குக் கொண்டு வந்ததாக அரசு அறிவித்த தினத்திலும், அதற்கு முன், பின்னான தினங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் பாலத்தில் வைத்து பெருமளவானவர்கள் தங்களது பிள்ளைகளை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர்.

மதகுரு முன்னிலையிலேயே இது இடம்பெற்றிருந்தது. இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்கள் இன்றுவரை வீடு திரும்பவில்லை.

### பொய் கூறிய அரசு

போர் உக்கிரம் பெற்றிருந்த காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 50 ஆயிரத்துக்கும் குறைவானோரே உள்ளனர் என அப்போதைய அரசும், அதன் பாதுகாப்புச் செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

ஆனால், போர் முடிந்த பின்னர் முகாம்களில் 3 லட்சம் மக்கள் அடைக்கப்பட்டிருந்தமை அம்பலமானது. இரண்டரை லட்சம் மக்களைக் கணக்கில் எடுக்காமல் பொய் கூறியது முன்னைய அரசு.

இதனைவிட, மன்னார் மாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை மிக முக்கியமான தகவலை இது தொடர்பில் வெளிப்படுத்தியிருந்தார்.

2009 ஆம் ஆண்டு இராணுவக் கட்டுப்பாட்டுக்கு வருவதற்கு முன்னரான சனத் தொகையையும், இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்ததன் பின்னரான சனத் தொகையையும் ஒப்பிட்டு ஒரு லட்சத்து 46 ஆயிரம் பேர் இல்லாமல் போனமையை வெளிப்படுத்தியிருந்தார். 2013 ஆம் ஆண்டு அவர் இதனைப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் எத்தனை லட்சம் பேர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது உங்களுக்கே புலப்படும். இதனால் வடக்கு – கிழக்கின் ஒட்டுமொத்த சனத் தொகையின் பெரும்பான்மை வீதம் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நீங்கள் உணர வேண்டும்.

### உறவுகளின் மனநிலை

27 வருடங்களாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் வீடு திரும்புவார்கள் என்று எதிர்பார்த்திருக்கும் அந்த உறவுகளின் மனநிலை எப்படி இருக்கும் என்பதை இங்குள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

எத்தனையோ பெற்றோர், தமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டமையால் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவும், அடுத்த நேர உணவுக்கே வழியில்லாதவர்களாகவும் தாயக தேசத்தில் அல்லலுற்றுக் கொண்டிருக்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகள் உங்களிடம் நட்டஈட்டை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம், தங்கள் அன்புக்குரிய உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே ? அவர்கள் கொலை செய்யப்பட்டால் யாரால் செய்யப்பட்டார்கள் ? கொலை செய்தவர்களுக்கு என்ன தண்டனை ? இதைத்தான் அவர்கள் கேட்கின்றார்கள்.

### பதில் இல்லை

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகளின் கேள்விக்கு முன்னைய அரசுகளோ, தமிழ் மக்களின் வாக்குப் பலத்தினால் ஆட்சிக்கு வந்த இந்த அரசோ இன்னும் பதில் கூறவில்லை. மாறாக அவர்களை மேலும் மேலும் புண்படுத்தும் கருத்துக்களைத்தான் தெரிவித்து வருகின்றன. தமிழில் கூறுவார்கள், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது என்று. அதைத்தான் இவர்கள் செய்து வருகின்றார்கள்.

### பிரதமரின் கூற்று

பிரதம கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த தேசிய தைப் பொங்கல் விழாவில் கலந்து கொண்டிருந்தார். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இறந்துவிட்டார்கள் என்ற சாரப்படவும், சிலர் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்று விட்டார்கள் என்று அர்த்தப்படவும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற முடிவு பிரதமருக்குத் தெரிந்திருந்தால் இந்த அலுவலகம் எதற்காக அமைக்கப்பட வேண்டும்? இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் இறந்தார்கள் என்றால் அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டியது தானே.

### சந்திரிகா கூறியவை

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார், தனது பேட்டியில், மஹிந்தவின் காலத்தில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை இராணுவத்தினர் கொலை செய்திருப்பார்கள் என்று கூறியிருந்தார். இது தொடர்பில் அவருக்கு நம்பிக்கையான ஆதாரம் கிடைக்காமல் பொறுப்பான பதவியில் இருந்தவர் இப்படிக் கூறியிருக்க மாட்டார்.

இந்தக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் யார் என்பதை இந்த அரசின் முக்கிய பிரதிநிதியே ஏற்றுக் கொள்கின்றார். பின்னர் ஏன் இராணுவத்தினருக்குத் தண்டனை கொடுப்பதற்குத் தயங்குகின்றீர்கள்? குற்றம் இழைத்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு தான் கூறுகின்றது!

குற்றம் இழைத்தவர்கள் படை

பக்கம் 18 »

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கிடைத்த படிப்பினை

வடக்கு மாகாண சபைக் குழப்பம் பெரும் மழை அடித்து ஓய்ந்த மாதிரி அடங்கியிருக்கின்றது. மழை ஓய்ந்தும் தூவானம் விடாத மாதிரி சிறிய, சிறிய சச்சரவுகள் நீடிக்கவே செய்கின்றன. பெரும் பூகம்பத்தின் பின்னர் விட்டு விட்டுத் தொடரும் நில அதிர்வுகள் போல சிறிய அரசியல் அதிர்வுகள் இல்லாமல் இல்லை.

நடந்து முடிந்த அபத்த நாடகம் இந்தப் பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டி காட்டியபடியே பல பட்டறிவுகளை, கசப்பு அனுபவங்களை சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளுக்கும் தந்திருக்கின்றது என்பது உறுதி.

முதல்வர் என்றாலும் தனித்து ஓட முடியாது, தான்தோன்றித்தனமாகச் செயற்பட இயலாது, கலந்து பேசி, அனைவரையும் அரவணைத்து வழி நடத்துவதே தலைவனுக்கு அழகு என்பது உணர்த்தப்பட்டிருக்கின்றது.

அதேநேரம், அதிகாரத் தரப்புக்குள் தனிக் குழுவாக இயங்கி, கால் தடம் போடும் சதி முயற்சி எல்லாச் சமயங்களிலும் வெற்றி பெறப்போவதில்லை என்பதும் பலருக்கும் புரிந்திருக்கும்.

மக்களின் மனநிலை எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது. எல்லா விடயங்களையும் மக்கள் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள், பொங்கியெழவும் செய்வார்கள் என்பதும் கூட அரசியல் தலைமைகளுக்கு உணர்த்தப்பட்டிருக்கின்றது என்றே நினைக்கின்றோம்.

தேர்தலுக்கு தேர்தல் மக்கள் நித்திரை விட்டெழுந்து வந்து தங்களுக்கே வாக்குப் போடுவார்கள் என்ற மமதையில் அரசியல்வாதிகள் செயற்படக் கூடாது, செயற்படவும் முடியாது என்பதும் ஆணித்தரமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அரசியல் விழிப்புணர்ச்சி பெறும் மக்கள் வீட்டுக்கு வெளியே வந்தும் வாக்குப் போடப் பின் நிற்க மாட்டார்கள் என்பது உணர்த்தப்பட வேண்டியவர்களுக்குப் புரிய வைக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

அரசியல் கட்டமைப்புக்களில், அடுத்த தலைமுறையினரான இளைஞர்களைச் சரியாக உள்வாங்காமல், அரசியல் சாணக்கியம் என்ற பெயரில் 'பழசு'கள் நடத்தும் துக்ளக் தர்பார் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தவல்லன என்பதைச் சத்தம் சந்தடியில்லாமல் புரிய வைத்திருக்கின்றன அண்மையில் கட்டவிழ்த்துவிட்ட சம்பவங்கள்.

இருபத்தியிரண்டு உள்ளூராட்சிச் சபைகளை ஒரு பதவிக் காலம் முழுவதும் கையில் வைத்திருந்தும் கூட, அதன் மூலம் அடுத்த தலைமுறை இளைஞர் சக்தியைச் சரிவர வளைத்துப் போட லாயக்கற்றவர்களாக அரசியல் தலைவர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பதும், இப்போது இளைஞர் தலைவர்கள் என்று தம்மைச் சுற்றி நிறுத்தப்பட்டிருப்போர் உண்மையில் இளம் சந்ததியைத் தம்முடன் கட்டிப் போட்டு வைத்திருக்கும் பிரதிநிதிகள் என்று கூறக் கூடியவர்கள் அல்லர் என்பதும் கூடத் தலைவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்றால் அதில் தவறில்லை.

இளம் தலைமுறையின் மன உணர்வுகளை உள்வாங்கி, அவர்களுடன் ஊடாடி, அவர்களையும் தமது அரசியல் செயற்பாடு என்ற பயணத்தில் சேர்த்துக் கொள்ளத் தலைவர்கள் முன்வர வேண்டும். அடுத்த தலைமுறையை வெறும் சொல்லாடல்களால் ஏமாற்றி, தமக்கு வாக்களிக்கும் இயந்திரங்களாக எப்போதும் - தொடர்ந்தும் - பயன்படுத்திவிட இயலும் என்ற நினைப்பிலிருந்து தலைவர்கள் விடுபட வேண்டிய காலம் வந்துவிட்டது. அந்த எச்சரிக்கையே கடந்துபோன சம்பவங்களின் பிரதான படிப்பினை என நாம் கருதுகிறோம்.

ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்ட காலம் வேறு. இப்போது நடக்கும் ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளின் செல்நெறி வேறு.

ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் மக்கள் மத்தியிலிருந்துதான் முகிழ்கின்றது. ஆனால், ஒரு கட்டத்துக்கு மேல் வழிகாட்டல்கள், தீர்மானங்கள், முடிவுகள் மேல் மட்டத்திலிருந்து வருவனவாக மாறி விடுகின்ற சூழல் ஏற்படுகின்றது. அது தவிர்க்க முடியாதது.

ஆனால், ஜனநாயக அரசியல் பாதை அதற்கு முற்றிலும் மாறானது. தீர்மானங்கள், முடிவுகள் எடுப்பவர்கள் தலைவர்களாக இருக்கலாம். ஆனால், அதற்கான ஆரம்பம் - அல்லது சிந்தனை ஊற்று - அல்லது கருத்து நிலைப்பாடு - மக்கள் மத்தியிலிருந்து கிளம்பி வருவதாக இருக்க வேண்டும்.

தலைவர்கள் மூடு மந்திரமாகத் தீர்மானங்களை எடுத்து அறிவிப்பவர்களாக இருப்பின் ஜனநாயக அரசியல் செல்நெறி புயலுக்குள் பயணிக்கும் கப்பல் போன்றதாகத் தான் இருக்கும்.

தமிழ்க் கூட்டமைப்பைப் பொறுத்தவரை, அதன் தலைவர்களுக்கு இடையில் கூட அத்தகைய ஜனநாயக செல்நெறி - கருத்துப் பகிர்வின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கும் மாண்பு - இல்லை என்பதையே அதன் பங்காளிக் கட்சித் தலைவர்கள் அவ்வப்போது வெளிப்படுத்திவரும் அதிருப்திக் கருத்துக்கள் அம்பலப்படுத்தி நிற்கின்றன.

ஜனநாயக செல்நெறிகளை, அதன் சிறந்த பண்பியல்புகளை, அதன் மகத்துவமான நடைமுறைகளை, அதன் மேன்மையான விழுமியங்களைப் பின்பற்றத் தவறியதன் விளைவே வடமாகாண சபையில் ஏற்பட்ட பூகம்ப அதிர்வுகளுக்குக் காரணம்.

சம்பந்தப்பட்டோர் இதனைப் புரிந்துகொண்டால் சரி.

# பௌத்த பிக்குகளை யாரும் இழிவுபடுத்த வேண்டாம்!

## அஸ்கிரிய பீடாதிபதி எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 22

பௌத்த பிக்குகளை எவரும் இழிவுபடுத்தக் கூடாது என்று அஸ்கிரிய பீடம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அஸ்கிரிய பீடாதிபதி வரா கொட ஞான ரத்ன தேரர் கடுமையான தொனியில் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சிங்கள பௌத்தர்களுக்கு எதிராக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அனைத்து பீடங் களின் மாநாயக்க தேரர்களும், தேசப்பற்றுடையவர்களும் இந்த அழுத்தங்களை எதிர்நோக்க ஆயத்தமாக வேண்டும்.

பௌத்தர்கள் ஏனைய மதங்களை மதிப்பவர்கள். பொதுபல சேன இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்த ஞானசார தேரரை ஊடகங்களும் சில அரசியல்வாதிகளும் மோசமாகத் திட்டி வருகின்றனர்.

அவருடைய தொனி சற்றுக் கடுமையான போதிலும், அவர் ஒரு பௌத்த பிக்கு என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஞானசார தேரரின் கருத்துக்களை புறந்தள்ளிவிட முடியாது. ஞானசார தேரரின் கோரிக்கைகள் தொடர்பில் அரசு நியாயமான கோணத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது.

ஞானசார என வெறுமனே சிலர் அவரை விளிக் கின்றனர். சிரேஷ்ட பௌத்த பிக்கு ஒருவருக்கு மட்டுமே தமது இளைய பௌத்த பிக்கு ஒருவரை பெயர் சொல்லி அழைக்க முடியும்.

# அஸ்கிரிய பீடத்தின் அறிக்கையை முழுமையாக ஆராய்கிறது அரசு

## இணைப் பேச்சாளர் ராஜித கூறுகிறார்



கொழும்பு, ஜூன்22

கண்டி அஸ்கிரிய பீடத்தால் வெளியிடப்பட்டுள்ள கடுமையான அறிக்கை தொடர்பில் அரசு ஆராய்ந்து வருவதாக அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பௌத்த பிக்குகளை இழிவுபடுத்தக் கூடாது. ஞானசார தேரரின் நிலைப்பாட்டை மதிக்க வேண்டும். சிங்கள பௌத்தர் களுக்கு உள்நாட்டு வெளி நாட்டு ரீதியாக சதித் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது என்று அஸ்கிரிய பீடாதிபதி வராகொட ஞான ரத்ன தேரர் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நாட்டைப் பாதுகாப்பதற்கே பௌத்த பிக்குகள் தொடர்ந்தும் போராடி வருகின்றார்கள் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே அறிக்கையை முழுமையாக ஆராய்ந்ததன் பின்னர் அரசின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்படும்.- என்றார். (எ)

# யாழ். கம்பன் விழா நாளை ஆரம்பம்

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் யாழ். கம்பன் விழா நாளை வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கல இசையுடன் கொழும்புக் கம்பன் கழகப் பெருந்தலைவர் ஜெ.விஸ்வ நாதன் தலைமையில் நல்லூர்



ஜெ.விஸ்வநாதன்

ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

'தினக்குரல்' பத்திரிகை ஸ்தாபகர் எஸ்.பி.சாமி தம்பதியர் மங்கல விளக்கேற்றுவர். கடவுள் வாழ்த்தை ப.சிவமைந்தன் இசைப்பார்.

நல்லை திருஞானசம்பந்த ஆதீனக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், வண. பேராசிரியர் ஞா.பிலேந்திரன், அஷ்ஷெய்க் மௌலவி எம்.ஏ. பைசர் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

தலைமையுரையைத் தொடர்ந்து தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் ஆற்றுவார்.

அதைத் தொடர்ந்து 'அவர் தலைவர்', 'கம்பனில் அரசியல்' ஆகிய இருநூல்கள் வெளியிட்டு வைக்கப்படும். அவற்றின் பிரதிகளை முறையே 'காலைக்கதிர்' நாளிதழின் ஆசிரியர் ந.வித்தியாதரனும், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் க.அருந்தவபாலனும் பெற்றுக் கொள்வர்.

அதன் பின்னர், 2016 யாழ். கம்பன் விழா மற்றும் 2017 கொழும்பு கம்பன் விழா ஆகியவற்றின் இறுவட்டுகள் வெளியிடப்படும். இலங்கை வங்கி, வவுனியாக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் கு.சிவஞானசுந்தரம், பொறியியலாளர் சி.தயாபரன் ஆகியோர் அவற்றைப் பெற்றுக்கொள்வர்.

தொடர்ந்து தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் வி.அசோக் குமாரன் தலைமையில் இலக்கிய ஆணைக்குழு நடைபெறும்.

'அறிவால் முதன்மை பெறும் அற்புதப் பாத்திரங்கள்' என்ற தலைப்பில் நடைபெறும் இந்த ஆணைக்குழு ஆய்வில் 'கூனியே!' என்ற பாத்திரம்



பேராசிரியர்.வி.அசோக்குமாரன்

குறித்து இரா.செல்வவடிவேலும், 'அனுமனே!' என்ற பாத்திரம் குறித்து ந.விஜயசுந்தரமும், 'தாரையே!' என்ற பாத்திரம் குறித்து தி.வேல்நம்பியும் உரை நிகழ்த்துவர்.

நாளை மறுதினம் சனிக்கிழமையும் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலையும், மாலையுமாக இரண்டு நேர அமர்வாக இந்நிகழ்வு தொடர்ந்து இடம் பெறும்.

காலை நிகழ்வுகள் நல்லூர் கம்பன் கோட்டத்திலும், மாலை நிகழ்வுகள் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்திலும் நடைபெறும். (உ)

## நாளை

23.06.2017
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : ரோகிணி மு.ப 7.42 வரை
திதி : சதுர்த்தசி மு.ப 11.41 வரை
சுபநேரம் : 5.54 - 7.24 வரை
இராகுகாலம் : 10.24 - 11.54 வரை

# முஸ்லிம்களுக்கும் அரசுக்கும் இடையே பிளவை ஏற்படுத்த எதிர்த்தரப்பால் அரசியல் ரீதியில் சதி மேற்கொள்ளப்படுகிறது!

கொழும்பு, ஜூன் 22

முஸ்லிம்களுக்கும் அரசுக்கும் இடையே பிளவை ஏற்படுத்த எதிர்த்தரப்பால் அரசியல் ரீதியான சதி முன்னெடுக்கப்பட்டு வருகிறது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியுள்ளார்.

இஸ்லாமியர்களின் புனித நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றுள்ளது.

இஸ்லாமிய சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பெருமளவானோர் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

**இப்தார் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு**

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனைத்து இனங்களுக்கு மிடையில் சமாதானம் மற்றும் ஒற்றுமையைக் கட்டியெழுப்பி நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அரசு பரந்த செயற்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

முன்னர் முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள், தற்போது அரசுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் பேதங்களை ஏற்படுத்தவதற்கு அரசியல் சதியில் ஈடுபட்டுள்ளனர்.



தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவதற்காகவே கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் நாட்டின் சிறுபான்மை மக்கள் எனக்கு வாக்களித்தனர். அந்த பொறுப்புக்களை உரியவாறு நிறைவேற்ற பாடுபடுகிறது அரசு.

எனவே, அரசியல் சதிகளில் சிக்காது எதிரிகளையும் நண்பர்களையும் இனங்கண்டு செயற்படுங்கள் என்று நான் அனைத்து முஸ்லிம்களிடமும் கோரிக்கை விடுக்கிறேன்.- என்றும் ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான பைஸர் முஸ்தபா, ரவி கருணாநாயக்கா, ரிஷாத் பதியுதீன், இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# சம்பிக்கவின் கருத்துக்கு ரிஷாத் பதியுதீன் எதிர்ப்பு!

கொழும்பு, ஜூன் 22

கொழும்பில் சேரும் குப்பைகளை, புத்தளம் அறுவக்காடு பிரதேசத்திற்குக் கொண்டு செல்ல மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்க வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்த கருத்துக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது.

இதன்போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்த கருத்திற்கு, அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இதன்போது அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புத்தளத்தை அரசு தொடர்ந்து துன்பப்படுத்தி வருகின்றது. வட மாகாணத்திலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட ஒரு லட்சம் முஸ்லிம்களை தாங்கிக் கொண்டு தமது வளங்களை எல்லாம் பறிகொடுத்துள்ளது புத்தளம்.

இதுவரையில் புத்தளத்திலுள்ள மக்களுக்கு எந்த இழப்பீடுகளும், நஷ்டஈடுகளும் வழங்கப்படவில்லை.

இருப்பினும் சிமெந்து தொழிற்சாலையை அங்கு நிறுவி புத்தளத்தை மாசுபடுத்தி உள்ளீர்கள். அனல்மின் நிலையத்தை கொண்டு வந்து அந்த மக்களை கஷ்டத்தில் போட்டுள்ளது அரசு.

சம்பூரில் அனல் மின்நிலையத்தை அமைக்க முற்பட்ட போது எதிர்ப்புக்களால் தானே கைவிடப்பட்டது. புத்தளத்தில் அனல்மின் நிலையம் அமைக்கும் போது தொழில்வாய்ப்பில் 50 சதவீதம் தருவதாக கூறினீர்களே, அது நடந்ததா?

1989 ஆம் ஆண்டிலிருந்து இந்த மக்களுக்கு எந்த பிரதிநிதித்துவமும் இல்லை. தேசிய கட்சிகளுக்கு மாறிமாறி வாக்களித்து ஏமாந்து போய் உள்ளனர்.

அரசியல் அநாதைகளாக இருக்கும் அந்த மக்களை பார்ப்பதற்கோ, கேட்பதற்கோ யாரும் இல்லாத நிலையில் நீங்களும் துன்பப்படுத்துகிறீர்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# தற்போதைய அரசு மட்டுமன்றி கடந்த ஆட்சியிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டது!

## 'கபே' பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 22

தற்போதைய அரசு மட்டுமன்றி கடந்த அரசும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலம் தாழ்த்தியே வந்தது என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம்



கடந்த 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த போதிலும் அப்போதைய அரசு 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரையில் தேர்தலை ஒத்தி வைத்திருந்தது.

மீளவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாத வகையில் அந்த அரசு முன்னெடுத்த நடவடிக்கைகளால் ஆறு ஆண்டுகளுக்கு மேல் புதிய கட்சிகளை பதிவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்களின் ஜனநாயக உரிமைகளை முடக்கும் வகையில் தற்போதைய அரசியல்வாதிகளும் தேர்தலை ஒத்தி வைக்க முயற்சிக்கின்றனர்.

எனினும், சிறிய அரசியல் குழுக்களைச் சேர்ந்தோரும் மக்களும் கூடிய விரைவில் தேர்தலை நடத்தவேண்டும் எனக் கோரி வருகின்றனர். தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் தேர்தலை நடத்த வேண்டும் என்று கோரி வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நீர்க்கட்டணங்கள் விரைவில் உயர்த்தப்படும் என்கிறார் நீர்விநியோக இராஜாங்க அமைச்சர்!

கொழும்பு, ஜூன் 22

நீர்க்கட்டணங்கள் விரைவில் உயர்த்தப்படும் என நகர திட்டமிடல் மற்றும் நீர்விநியோக இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

குழாய் மூலம் வழங்கப்படும் குடிதண்ணீருக்கான உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது.

எனவே, விரைவில் நீர்க் கட்டணங்களை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தற்போது ஆயிரம் லீற்றர் தண்ணீர் 12 ரூபாவிற்கு வழங்கப்படுகின்றது. எனினும் போத்தலில் அடைக்கப்பட்ட குடி தண்ணீர் ஒரு லீற்றர் 70 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

நீரை சுத்திகரித்து மக்களுக்கு வழங்குவதற்கு கூடுதலான செலவு ஏற்படுகின்றது.

எனினும், தண்ணீர் கட்டணங்களை எவ்வாறு அதிகரிப்பது என்பது குறித்து இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு புதிய பாடசாலைச் சீருடைகள்!

கொழும்பு, ஜூன் 22

சீரற்ற காலநிலையால் இலங்கையில் ஏற்பட்ட அனர்த்த நிலைமையினால் பாதிக்கப்பட்ட 58 ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலை மாணவர்களுக்கு புதிய சீருடைகள் மற்றும் பாடசாலை உபகரணங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக, மாணவர்களுக்கு புதிய சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

மேலும், மாணவர்களுக்கு தேவையான பாடப்புத்தகங்கள் உள்ளிட்ட பாடசாலை உபகரணங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கல்வி இராஜாங்க செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் சப்ரகமுவ தென் மாகாணங்களில் குறித்த வேலைத்திட்டம் முதலில் முன்னெடுக்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(க)

# விமான சேவையில் இலங்கைக்கும் பின்னடைவு!

கொழும்பு, ஜூன் 22

சர்வதேச ஸ்கை ட்ரெக்ஸ் விமான சேவை மதிப்பீட்டில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு 81 ஆவது இடம் கிடைத்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் இடம் பெறும் ஸ்கை ட்ரெக்ஸ் சர்வதேச விமான நிறுவனத்தின் மதிப்பீட்டு வேலைத்திட்டம் பரிஸ் விமான கண்காட்சிக்கு இணையாக பிரான்ஸில் இடம் பெற்றுள்ளது.

விருது வழங்கும் நிகழ்வில் சமகாலத்தில் விசேட அவதானத்தை வென்றுள்ள கட்டார் எயார்வேஸ் விமான சேவை முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த முறை மதிப்பீட்டில் 67 ஆவது இடத்தில் இருந்த ஸ்ரீலங்கன் விமான சேவை 14 இடங்கள் கீழ் இறங்கியுள்ள நிலையில் அது இலங்கைக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவாகும்.

இது விரைவான வீழ்ச்சி என விமானபோக்குவரத்து ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகம் ஒன்று மிகவும் அவசியம்!



திருமலையில் அமெ. தூதுவர் கேஷாப் தேரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 22

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அவர்களின் தாய்மார்கள் பதிலைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். அதற்கான தீர்வைப் பெறுவதற்கு காணாமல் ஆக்கப்பட்டவர்ளுக்கான பணியகம் ஒன்று மிகவும் அவசியம் ஆகும்.

-இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷாப் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கேஷாப் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார். இதன்போது, பல்வேறு தரப்பினரையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்த நிலையில், திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகத் தொடர் கவன வீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை அவர் சந்தித்தார். அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மூன்று மாதங்கள் கடந்தும் தொடர்ச்சியான கவன வீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷாப் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## காத்தான்குடியில் தொடர் மழை: வீதிகள் பாதிப்பு; மக்கள் சிரமம்!

காத்தான்குடி, ஜூன் 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. இதனால் காத்தான்குடி நகரசபை பிரிவிலுள்ள புதிய காத்தான்குடிப் பிரதேசத்தின் பல வீதிகளில் நீர் தேங்கி உள்ளன. இதனால், வாகனப் போக்குவரத்துக்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளமையால், இப்பகுதி வாழ் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும், டெங்குநோய் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், வீதிகளில் நீர்தேங்கியிருப்பதால் டெங்கு உட்பட பல தொற்றுநோய்கள் பரவக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச)



## பாரம்பரிய மரபுகளைத் தேடி மட்டக்களப்பில் களப்பயணம்!


மட்டக்களப்பு, ஜூன் 22

மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் கடந்த வாரம் நடைபெற்ற சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் ஓர் அங்கமாக, மட்டக்களப்புப் படுவான்கரைப் பிரதேசத்துக்கு கடந்த திங்கட்கிழமை பாரம்பரிய, கலாசார மரபுகளைத் தேடும் ஒருநாள் களப்பயணம் மேற்கொள்ளப் பட்டது.

இந்தக் களப் பயணத்தில் மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தா அழகியல் கற்கைகள் நிறுவகக் கல்வியாளர்கள் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், கொழும்பு, கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, வெல்லாவெளியில் புராதன நாகர் காலத்தில் செதுக்கப்பட்டது எனக் கருதப்படும் கல்வெட்டுகள் மற்றும் தாந்தாமலையிலுள்ள முனிவர் மலைக்குகை உள்ளிட்ட பல இடங்களை இவர்கள் பார்வையிட்டனர்.

'போரும் போருக்குப் பின்னரான காலத்தில் தொட்டுணரா அல்லது அருவப் பண்பாட்டு மரபுகள் எதிர்கொள்ளும் சவால்களும் முக்கியத்துவமும்' என்ற தொனிப்பொருளில் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் ஏற்பாட்டில் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதிவரை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



## 15 முதிரைக்குற்றிகளுடன் ஒருவர் கைது!

கந்தளாய், ஜூன் 22

திருகோணமலை கந்தளாய்ப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட பதினைந்து முதிரை மரக்குற்றிகளுடன், ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

34 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலை அடுத்தே, இந்த நபர் கைது செய்யப்பட்டார். இதன்போது, முதிரைக் குற்றிகளை ஏற்றி வந்த சிறிய ரக லொறி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச)

# முறையற்ற ஆசிரிய இடமாற்றங்களே கல்வி வீழ்ச்சிக்கு முக்கிய காரணம்!

### கிழக்கு மாகாணசபை பிரதி அவைத் தலைவர் தெரிவிப்பு



திருகோணமலை, ஜூன் 22

முறையற்ற ஆசிரிய இடமாற்றங்களே மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம் ஆகும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்தார்.

கிழக்குமாகாணசபை அமர்வு, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதன்போது, ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான அவசரப் பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வருடத்தின்நடுப்பகுதியில் இடமாற்றம் வழங்குகின்றமையை வருடாந்த இடமாற்றம் என்று சொல்ல முடியாது. ஆசிரியர்களுக்கான இடமாற்றங்களைவருடநடுப்பகுதியில் மேற்கொள்கின்றமையால், மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாட்டில் பாதிப்பு ஏற்படும். அதன் தாக்கம் பரீட்சைகளிலும் காணப்படும். மாணவர்களின்பரீட்சைப்பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கும் இதுவே காரணம். பதில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டாலும் கூட, அந்தத் தாக்கம் இருக்கவே செய்யும்.

தேசிய இடமாற்றக் கொள்கையின் பிரகாரம் மே மற்றும் ஜூன் ஆகிய மாதங்களில் ஆசிரியர் இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டும். ஓகஸ்ட் மாதத்துக்குள் கல்வி வலயங்களில் இருந்து இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள்மாகாணத்துக்குகிடைக்க வேண்டும். அப் போதே, நவம்பர் மாதத்துக்குள் இடமாற்றப் பட்டியலைத் தயாரித்து, டிசெம்பர் மாதத்தில் வெளியிட முடியும். ஆனால், கிழக்கு மாகாணத்தில் இந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. கடந்த வருடம் செப்ரெம்பர் மாதத்தில் ஆசிரியர்களிடம் இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இது காலதாமதத்துக்குக் காரணமாக அமைந்தது.

ஆசிரியர்களை மட்டும் இடமாற்றுவதைவிட, வலயங்களில் 5 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றிவரும் அதிகாரிகளையும்இடமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன், 10 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றும் அதிபர்களுக்கான இடமாற்றம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். என்றார். (ச)

## சிறுவனுக்கு சூடு வைத்த தாய் கைது!

காத்தான்குடி, ஜூன் 22

மட்டக்களப்பு புதிய காத்தான் குடி அன்வர் நகரில் எட்டு வயதுடைய சிறுவன் ஒருவனுக்குச்சூடுவைத்தார் எனச் சந்தேகிக்கப்படும் தாயாரைப் பொலிஸார் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 45 வயதுடைய பெண் ஒருவரே கைது செய்யப்பட்டார்.

பிரஸ்தாப சிறுவன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச)

## இனவாதிகளுக்கு எதிரான சட்டங்கள் கடுமை ஆக்கப்பட வேண்டும்!

### கிழக்கு முதல்வர் தெரிவிப்பு

இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுப்போர் மீது, சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் தோன்றியுள்ள வெறுப்புணர்வுச் செயற்பாடுகள் தொடர்பில் நேற்றுப் புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உலகில் இனவாதத்தைத் தோற்கடித்த நாடு என்ற பெருமையை இலங்கை பெற வேண்டும். அதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். குறிப்பாக சிறுபான்மையினரான தமிழர்களும், முஸ்லிம்களும் அதிக சிரத்தையுடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இலங்கையின் இறைமையை மீறுகிறது ஐ.நா. சிறப்பு நிபுணரின் அறிக்கை!

நாடாளுமன்றில் நீதி அமைச்சர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 22

ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் மோனிகா பின்டோ, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்த அறிக்கை, இலங்கையின் இறைமையை மீறியுள்ளது என இலங்கையின் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையின் நீதித்துறை தொடர்பாக, அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட, நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களின் சுயாதீனம் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் மோனிகா பின்டோவின் அறிக்கையில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டிருந்தன.

இந்த அறிக்கை தொடர்பில் இலங்கை அரசின் நிலைப்பாட்டை, நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் ஏழு நாள்கள் மட்டுமே தங்கியிருந்த அவரது குற்றச்சாட்டுகள் எமக்கு அதிர்ச்சி அளிக்கின்றன. பல்வேறு நாடுகளின் நீதி முறைமைகள் தொடர்பான அவரது ஆற்றல் சந்தேகத்துக் குரியதாக இருக்கிறது.

இந்த அறிக்கை இலங்கையின் புகழுக்குக் களங்கத்தை ஏற்படுத்துகிறது. நாட்டின் இறைமையை மீறுகிறது.

அரசமைப்பு பேரவை தொடர்பான மோனிகா பின்டோவின் கருத்து ஏற்புடையதல்ல.

அவர் தனது அறிக்கையில், அரசமைப்புப் பேரவை சுதந்திரமானது அல்ல என்றும், எல்லா நியமனங்களையும் இலங்கை ஜனாதிபதியே செய்கிறார் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசமைப்பு பேரவை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே, இலங்கை ஜனாதிபதியால் நியமனங்களைச் செய்ய முடியும் என்பதை அவர் அறியவில்லை.

அரசசார்பற்ற நிறுவனங்களின் தகவல்களின் அடிப்படையில் தான் பின்டோவின் அறிக்கை அமைந்திருக்கிறது.

ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரின் இந்த அறிக்கை தொடர்பான அதிகாரபூர்வ நிலைப்பாட்டை, இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக, சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அறிவிப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய வரிச் சட்டத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்படும் – பந்துல



கொழும்பு, ஜூன் 22

அரசின் புதிய வரிச் சட்டத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்படும் எனக் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

புஞ்சி பொரளையில் கூட்டு எதிர்க்கட்சியால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசால் கொண்டுவரப்பட உள்ள புதிய வரிச் சட்டங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும். இந்த புதிய வரிச் சட்டம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் அரசு இந்தச் சட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்த பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசுக்கு பிரதானமாக வருமானம் ஈட்டித்தரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சுங்கத் திணைக்களம் போன்றவற்றை தனியார்துறைக்கு வழங்க அரசு முயற்சிக்கின்றது.

இந்த முயற்சியின் மற்றுமொரு கட்டமாகவே இந்த அரசின் உத்தேச புதிய வரிச் சட்டத்தை அறிமுகம் செய்ய முடியும்.

ஏற்கனவே, புதிய சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்றில் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டு ஏழு நாள்களுக்குள் வழக்குத் தொடரப்படும் எனவும் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். (க)

## பிரெஞ்சுப் போர்க்கப்பலில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்!

கொழும்பு, ஜூன் 22

நல்லெண்ண விஜயமாக கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள பிரெஞ்சுப் போர்க் கப்பல்களை, இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன நேற்றுமுன்தினம் பார்வையிட்டுள்ளார்.

பிரெஞ்சுக் கடற்படையின் மிஸ்ரால் எனப்படும் பெரிய தரையிறக்க மற்றும் உலங்கு வானூர்தி தாங்கிக் கப்பலும், கோர்பெட் என்ற போர்க்கப்பலும் நேற்று முன்தினம் கொழும்பு வந்தன.

இந்தக் கப்பல்களை நேற்று முன்தினம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன சென்று பார்வையிட்ட அதே சமயம், பிரெஞ்சு கடற்படை அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தி யுள்ளார்.





இதன்போது பிரெஞ்சுக் கடற்படையினர் தமது போர்க் கப்பலில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு அணிவகுப்பு மரியாதையை அளித்துள்ளனர்.

## ஜனாதிபதி மாளிகையில் தேசிய இப்தார் நிகழ்வு!



கொழும்பு, ஜூன் 22

இஸ்லாமியர்களின் புனித நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இஸ்லாமிய சமயத் தலைவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பிரெஞ்சு கடற்படையின் உயர் மட்டத் தளபதி இலங்கைக் கடற்படைத் தளபதியுடன் பேச்சு!

கொழும்பு, ஜூன் 22

பிரெஞ்சு கடற்படையின் கடல்சார்படையின் பிரதித் தளபதி றியர் அட்மிரல் ஒலிவர் லாபாஸ் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.



இதன்போது, பரஸ்பர நலன்கள் மற்றும் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் தொடர்பாக இரண்டு நாடுகளின் தளபதிகளும் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பிரெஞ்சுத் தூதுவர் ஜீன் மரின் சுப் மற்றும் பிரெஞ்சு தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கொமாண்டர் லொயிக் பிசோட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir



# 75 ஆயிரம் வெளிநாட்டவருக்கு பார்வை வழங்கிய இலங்கை

பார்வைக் குறைபாடுடைய சுமார் 75 ஆயிரம் வெளிநாட்டவர்களுக்கு பார்வை வழங்க இலங்கை முடிந்துள்ளதாக இலங்கை கண்தானம் செய்வோர் சங்கத்தின் சர்வதேச கண் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் ஜனத் சமன் மாதர ஆராச்சி தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டளவில் உலகில் பார்வைக் குறைபாட்டை இல்லாதொழிக்க பெரிய நடவடிக்கையை மேற்கொள்ளத் தமது சங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

75 ஆயிரத்து 385 வெளிநாட்டவர்களுக்கும், 47 ஆயிரத்து 830 உள்நாட்டவர்களுக்கும் இலங்கை கண்தானம் செய்வோர் சங்கம் பார்வையை பெற்றுக் கொடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர் ஜெயவர்தன, டி.பி. விஜேதுங்க மற்றும் வில்லியம் கொபல்லாவ ஆகியோரும் முன்னாள் பிரதமர்களான டட்லி சேனாநாயக்க ஸ்ரீமாவோ பண்டார நாயக்க ஆகியோரும், இலங்கை கண்தானம் செய்வோர் சங்கத்துக்கு தமது கண்களைத் தானம் செய்திருந்தனர்.-என்றார். (எ)

# பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்த விசேட திட்டம்

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 22

நாட்டில் கடந்த 2015ஆம் ஆண்டை விட 2016ஆம் ஆண்டே குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த விசேட குற்றத் தடுப்புப் பிரிவு ஒன்றை அரசு செயற்படுத்தியுள்ளது என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

குற்றச்செயல்களைகட்டுப்படுத்தஅரசுமேற்கொண்டுள்ள செயன் முறைகள் தொடர்பாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்று முன் தினம் நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப்பதிலளித்தபோதே சட்டம் ஒழுங்கு அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் திட்டமிட்ட படு கொலைகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள அந்தப் பிரிவை, பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரின் கீழ் கொண்டு வந்து அதில் மறுசீரமைப்புக்களையும் மேற்கொண்டுள்ளது.

அந்தவகையில், பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் திட்டமிட்ட படு கொலைகளைத்தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு அதிக சிரத்தையுடன் செயற்படுகின்றது.-என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 22.06.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித்திங்கள் 8 ஆம் நாள் திரயோதசித்திதி பகல் 3.38 வரை. பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: கார்த்திகை பகல் 10.44 மணி வரை. பின்னர் ரோகிணி. மரணயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 1.47 மணி முதல் 3.22 மணி வரை. சுபநேரம்: காலை மணி 7.27 முதல் 8.56 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: ஆனிமாத தேய்பிறை திரயோதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: கார்த்திகை - ரோகிணி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இனிமையான நாள். பணவரவு அதிகரிக்கும். நற்காரியங்கள் கைகூடும். உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வுகள், விரும்பிய மாற்றங்கள் கிடைக்கும்.

**ரிஷபம்:** இணக்கமான நாள். பணவிடயங்களில் திருப்தி உண்டாகும். சமூகத்தில் இவர்கள் சேவைக்கு பாராட்டுக் கிடைக்கும். பெண்களுக்குத் திருமண காரியம் ஒப்பேறும்.

**மிதுனம்:** யோசனையான நாள். மனக்கஷ்டமும், பணக்கஷ்டமும் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் பகைமை உண்டாகும். எதிலும் முன்னேற்றத்துக்குத் தடை உண்டாகும்.

**கடகம்:** இன்பமான நாள். கடந்த காலக்கஷ்டங்கள் குறைவடையும். இல்வாழ்வு நன்றாக அமையும். கோபமாய் பிரிந்த உறவினர்கள் மீண்டும் வருவார்கள்.

**சிம்மம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். தொட்ட கருமங்கள் தடைப்படும். லாபம் குறையும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**கன்னி:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் உயர்வடையும். தடைப்பட்ட காரியங்கள் தடைநீங்கி வீட்டுக் கதவைத் தட்டும்.

**துலாம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். குடும்ப விஷயத்தில் அந்நியர் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தும். பயணங்களைத் தள்ளிப் போடுவது நல்லது.

**விருச்சிகம்:** விருத்தியான நாள். இழுபறியாக இருந்த நிலைமாறி, இன்பம் இல்லம் தேடிவரும். பணியிடத்திலும், குடும்பத்திலும் இவர்கள் வார்த்தைகளுக்கு மதிப்புக் கூடும்.

**தனுசு:** இன்பமான நாள். வியாபாரத்தில் மேலதிக லாபம் கிடைக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. திருமண காரியங்கள் ஒப்பேறும்.

**மகரம்:** இணக்கமான நாள். பணபலம் அதிகரிக்கும். தடைப்பட்ட பதவி உயர்வு, இடமாற்றம் எல்லாம் தேடிவரும். பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

**கும்பம்:** கவலையான நாள். தனவரவு குறையும். புது நட்புகள் மூலம் புதுப்புது பிரச்சினைகள் வரலாம். அதனால் அதிக நெருக்கம் வேண்டாம்.

**மீனம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பிறருடைய விஷயத்தில் தலையிடாமல் இருந்தால் தடையும், தடங்கலும் தவிடுபொடியாகும்.

**சந்திராட்டமநாள்:** சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் இன்று நற்கருமங்களில் ஈடுபாடு கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

# சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு தாயகம் திரும்பிய மக்களுக்கு வீடுகள்




சர்வதேச அகதிகள்தினத்தை முன்னிட்டு அகதிகளாக வாழ்ந்து வருபவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் 567 வீடுகளும், இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 60 பேருக்குமான வீடுகளை வீட்டுத்திட்டங்கள் மீள் குடியேற்ற அமைச்சால் வழங்கப்பட்டன.

சர்வதேச அகதிகள் தினம் நேற்றுமுன்தினம் நினைவு கூரப்பட்டிருந்த நிலையில் திருகோணமலை குளக்கோட்டன் ஒன்றுகூடல் மண்டபத்தில் நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகாரங்கள் அமைச்சால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர் பாஸ்கரன், திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.அருந்தவராசா, அரச அதிகாரிகள் மற்றும் கடந்த கால போரின் போது உறவுகள் மற்றும் உடைமைகளைஇழந்தோர் பங்கேற்றனர்.

மேலும் போரின்போது இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் தஞ்சமடைந்து மீண்டும் நாடு திரும்பியவர்கள் தங்கள் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டனர். (எ)

# ஓட்டோவை மறித்து சோதனை: போலி நாணயத்தாள்களுடன் நால்வர் கைதாகினர் உடப்பில்!



புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடப்புப் பிரதேசத்தில் சந்தேகத்துக்கு இடமான ஓட்டோ ஒன்றை மறித்துச் சோதனைக்குட்படுத்தியபோது போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த ஓட்டோவில் பயணித்த சந்தேகநபர்கள் நான்கு பேர்களையும் கைதுசெய்த முந்தல் பொலிஸார், அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது சந்தேகநபர்களிடம் இருந்து, 5 ஆயிரம் ரூபா மற்றும் ஆயிரம் ரூபா பெறுமதியான போலி நாணயத் தாள்கள் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் போலி நாணயத் தாள்களைப் பயன்படுத்தி உடப்பு பிரதேசத்தில் உள்ள கடைகளில் சில பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர். இது தொடர்பாக முந்தல் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களில் ஒருவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## இயற்கை அனர்த்தம் பாதித்த விவசாயிகளுக்கு இலவச நெல், உரம்!


*கொழும்பு, ஜூன் 22*


*இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வயல்களுக்கான நெல், உரம் என்பனவற்றை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய காப்புறுதி சபையின் தலைவர் கிட்னி கஜநாயக்க தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-*

*பாதிக்கப்பட்ட ஐந்து லட்சத்து 20 ஆயிரம் விவசாயிகளுக்கு நான்கு கோடி ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக திறைசேரி 520 கோடி ரூபாவை ஒதுக்கியிருந்தது. கமநல சேவைகள் மத்திய நிலையத்தின் ஊடாக இவை வழங்கப்படவுள்ளன.*

*உரக் கூட்டுத்தாபனமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன. இந்த வாரத்துக்குள் விநியோகப் பணிகள் பூர்த்தியாகும். - என்றார். (எ)*





# இணுவில் கந்தசுவாமி கோயில்

# தேர்த்திருவிழா சிறப்புமலர் - 22.06.2017

## அற்புதங்கள் பல நிகழ்த்திய எம்பெருமான் சித்திரத் தேரில் இன்று திருவீதியுலா

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற ஆலயமாக இணுவில் மத்தியில் எழில் கொஞ்சும் இயற்கை வனப்புடன் திகழும் இணுவில் கந்தசுவாமி கோவில் காலத்தால் முற்பட்ட வரலாற்றுப் பெருமையைத் தன்னகத்தே கொண்டது.

இவ்வூரின் வரலாறாக யாழ்ப்பாண வைபவ மாலையில் 'செங்கரும்பும் செந்நெல்லும் கமுகும் தழைத் தோங்கும்' இணுவிலில் மேழிக்கொடியுடையவனும் திரண்ட தோள்களையும் விரிந்த மார்பினையும் உடையவனும் குவளை மலர் மாலையை அணிந்த திருக்கோவிலூர் பேராயிரமுடையோன் முதலில் ஆட்சித் தலைவனாக விளங்கினான் எனக் கூறப்படுகின்றது. இவனது காலம் கி.பி. 1365 என முதலியார் செ.இராசநாயகம் யாழ்ப்பாணச் சரித்திரத்தில் எழுதியுள்ளார். அவன் மரபில் வந்த கனகராச முதலி காலத்து ஆலயமாக இணுவைக் கந்தன் ஆலயம் கருதப்படுகிறது.

இணுவில் கந்தசுவாமி கோவில் 1620 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் வருகையால் கிறிஸ்தவ சமயம் மேலோங்கி ஏனைய மதங்களும் சுதேச மக்களது பண்பாடு, பழக்க வழக்கங்களும் அதற்கிரையாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகின. அதற்கமைவாகப் போர்த்துக்கேயரால் பல ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டன. சமய அனுட்டானங்களைப் பேணியோர் தண்டிக்கப்பட்டார்கள்.

அந்தக் காலத்தில் அழிவுக்குட்பட்டு அழிந்து போன இத்தலம் மீண்டும் 1621 ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்டுத் தோற்றம் பெற்றதே தற்போதுள்ள கந்தசுவாமி கோவிலாகும். அந்தக் காலத்தில் வாழ்ந்த குழந்தையர் வேலாயுதர் என்பவரது கனவில் கந்தக் கடவுள் தோன்றித் தம்மை ஆதரிக்கும் படியும் தான் காஞ்சியிலிருந்து வந்ததாகவும் கூறி 'உனது வெற்றிலைத் தோட்டத்தில் நடப்பட்டுள்ள மரத்தடியில் காலால் மிதித்து அடையாளம் இட்டிருப்பேன் அவ்விடமே எனது இருப்பிடம்' எனக்கூறி மறைந்தார். அதிகாலை எழுந்த வேலாயுதர் தான் கண்ட கனவை எண்ணியவாறு வெற்றிலைத் தோட்டத்துக்குச் சென்றார். இது என்ன அதிசயம் கண்டது கனவல்ல நனவுதான் என உணர்ந்தார்.

பெருமான் உரைத்ததற்கிணங்கப் புதிதாக ஒரு நொச்சிமரம் நடப்பட்டு அருகில் பாதச்சுவடும் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார். அவ்விடத்தில் குடிலமைத்து வேற்பெருமானை வணங்கி வந்தார். மேலே கூறிய சம்பவத்திற்கிணங்க ஆலயம் அமைந்துள்ள காணியின் பெயர் 'நொச்சியொல்லை மிதியன்' என வழங்கப்படுகிறது. இந்த ஆலயத்தின் தலவிருட்சமாக இன்றும் அந்த நொச்சி மரம் கருவறைக்கருகில் நிற்பதைக் காணலாம்.

முருகப்பெருமானை நாடிவந்து பிணி தீரப்பெற்று அருள்வாக்குப் பெற்றுச் செல்லும் அடியவர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் குடிலாக அமையப்பெற்ற ஆலயம் வளர்ச்சி பெற்றுச் செங்கற் கோயிலாக மாற்றமடைந்தது. செங்கற் கோயிலில் வேற்பெருமானைப் பிரதிஷ்டை செய்து குடமுழுக்கும் நிகழ்த்தப்பட்டது. கூட்டுப் பிரார்த்தனை கந்தபுராண படலம் என்பன அடியவர்களால் நிகழ்த்தப்பட்டன. இந்த அருட் செயற்பாடுகளால் அயற்கிராமங்கள் மட்டுமன்றி தூரவுள்ள கிராமங்களும் கவரப்பட்டன.

எம்பெருமானை நாடி வந்த மக்கள் தொகைக்கேற்ப செங்கற் கோயிலை வெள்ளைக் கற்கோயிலாகக் கட்டுவதற்கு முருகன் அடியவர்கள் சித்தம் கொண்டனர். அதற்கிணங்க அருணாசலத்தின் மகன் சுப்பிரமணியத்தினது காலத்தில் தொடங்கப்பட்ட வெள்ளைக்கல் வேலைகள் அவரது மகன் ஆறுமுகத்தின் காலத்தில் 1840 ஆம் ஆண்டளவில் நிறைவு பெற்றன.

(தொடர்ச்சி 18 ஆம் பக்கத்தில்)



### ஆசியுரை

கருணை கூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு
திருமுருகன் வந்தாங்கு
உதித்தன உலகம் உய்ய.

"கலியுகத்தின் காக்கும் கடவுளான கந்தப் பெருமான். தமிழர்களின் தனித்துவமான ஒரு கடவுள் ஆவார்."

இவ்வாறே இணுவையம்பதியிலும் வீரலாற்றுச் சிறப்பு மிக்க இன்னல்கள் நீக்கும் இணுவை கந்தப் பெருமான்.

இக்கருணை கடவுளுக்கு மகோற்சவ காலம் நடைபெற்று வருகின்றது. அவ்வாறான இன்றைய தினம் தேர்த்திருவிழாவிலே தமிழர்களின் துயரை நீக்கி இன்பத்தை அளித்திட வீதியுலா வருகிறார்.

அந்தத் தருணத்திலே பக்தகோடிகள் அனைவரும் அணி திரண்டு ஒன்றுபட்டு கூடி வந்து முருகப்பெருமானின் அஸ்த்த ஐஸ்வரியங்களையும் பெற்று வாழ்க வளமுடன்.

**மகோற்சவ பிரதம குருக்கள்**
**சிவஸ்ரீ இராமஸ்கந்த ஸ்ரீகஜராம்**

ஆலய பரம்பரை குருமார்
ஸ்ரீ ஜெயந்தராம சர்மா
சிவஸ்ரீ அபராஜி குருமார்.

**அனுஷா பந்தல்**
இணுவில் கந்தசுவாமி
கோவில் முன்பாக
T.p. 0779789467

இணுவில் கந்தப் பெருமானின் அருள் பெற்றிடப் பிரார்த்திக்கின்றோம்

**ஸ்ரீ நாகபூசணி எக்ஸ்பிரஸ்**
யாழ் - கொழும்பு
தினசரி பஸ் சேவை
A/C, Non A/C with Video coach
ஆசனப் பதிவுகளுக்கும்
தொடர்புகளுக்கும்
T.P 077 0646293
0770868280

**S.R.PRASARATNAM INDUSTRIES**
நீர் இறைக்கும் இயந்திர
உதிரிப்பாக உற்பத்தியாளர்
இல - 143
கே.கே.எஸ்.வீதி
கோண்டாவில்
தாவடி.
தொ.இல - 0775380061
0776071929

**SAAJI பிறிண்டேர்ஸ்**
600 விதமான டிசைன்களில்
திருமண அழைப்பிதழ்களை
பெற்றுக் கொள்ளலாம்.
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.
0772209474,
021 224 2042
facebook: saaji print

**LITTLE MASTERS' MONTESOORI**
[அதி நவீன கணினி மயமாக்கப்பட்ட முன்பள்ளி]
நன்கு பயிற்றுவிக்கப்பட்ட போதியளவு
முன்பள்ளி ஆசிரியர்கள்
CHILDREN'S PRE SCHOOL
கே.கே.எஸ். றோட், இணுவில்.
(இணுவில் மத்திய கல்லூரிக்கு அண்மையில்)
T.p 0774172128

**யாழ்ப்பாணத்தில் காண்டம்**
**வாசிக்கப்படுகிறது**
ஸ்ரீ கௌசிக அகஸ்திய
நாடி ஜோதிட நிலையம் (PVT) Ltd.
P.ஜெய்சங்கர்
கடந்த கால, நிகழ்கால,
எதிர்காலம் போன்றவற்றைக்
கூறுகிறது.
தொடர்பு : 021 221 7944
நாவலர் வீதி, கைலாசபிள்ளையார்
கோவிலடி, நல்லூர்.

**அம்பிகா பான்சி**
K.K.S. Road, Inuvil.
T.p.021 2242074
**அம்பிகாபதி பான்சி**
சிறீன் பசார் றோட், யாழ்ப்பாணம்.
021 222 5759.

**வட இந்திய காசி**
**சீரடி யாத்திரை**
★ பாடசாலை விடுமுறையை அனுசரித்து
8 ஆம் மாதம் (ஆவணி) ஆரம்பம்.
டெல்லி, ஆக்ரா, தாஜ்மஹால் உட்பட பல
வரலாற்றுத் தலங்களுக்கும் சீரடி பாபா
தலத்துக்கும் சென்று வரலாம்.
தொடர்பு: கலாநிதி T.ஸ்ரீரங்கநாதன்
மகன் ராஜன்
0777680102, 0777362154

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் துணை
கதிர்காமக் கந்தன் துணை
**நீபா**
**ஜுவல்லறி**
உரிமையாளர் ஆர்.பவளராஜன்
470,கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
தொ.பே. 0212054454,
0773790035


உங்கள் எதிர்காலத் திட்டம் எதுவாயினும் உங்கள் ஒளிமயமான வாழ்வுக்குக் கைகொடுக்க நாம் தயார்....
**★கல்வி ★வேலைவாய்ப்பு ★வெளிநாடு**
எதுவாக இருந்தாலும் எம் இளஞ் சந்ததியின் கலங்கரை விளக்காக விளங்கும் WINSTAR CONSULTANTS உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
- சிறந்த உயர்தர கல்வி வழிகாட்டலை பெற,
- தகுதிக்கேற்ப விரும்பிய வேலைவாய்ப்பு பெற,
- கனவு நாட்டினை நேர்மையான முறையில் சென்றடைய
Plan your bright future with us.
WINSTAR CONSULTANTS
106, தபாற் பெட்டி சந்தி,
பலாலி வீதி,திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 320 2789 www.winstarjaffna.com




பொன்.வேணு கிருஷ்ணா

"ஜனாதிபதி ட்ரம்ப்பின் நடவடிக்கைகளும் அறிக்கைகளும் அமெரிக்காவின் நண்பர்களை அமைதியிழக்கச் செய்திருக்கின்றன என்பதை நான் உணர்கிறேன்'' என்றார் அவர்

இந்தக் கோட்பாட்டை அரிசோனா செனட்டர் ஜோன் மெக்கெயின் உடைத்தெறிந்தார். ஆஸ்திரேலியாவில் இரண்டு முன்னாள் பிரதமர்கள் உள்ளிட்ட உயர்நிலை அரசு மற்றும் இராணுவ அதிகாரிகள் முன்னிலையில் பேசிய மெக்கெயின் டொனால்ட் ட்ரம்ப் மீது ஓர் உலுக்கும் குற்றப்பத்திரிகையை வாசித்ததோடு அவரது நிர்வாகத்தை மறுதலிக்க ஆஸ்திரேலிய அரசாங்கத்திற்கு அழைப்பும் கூட விடுத்தார்.




''ஜனாதிபதி ட்ரம்ப்பின் நடவடிக்கைகளும் அறிக்கைகளும் அமெரிக்காவின் நண்பர்களை அமைதியிழக்கச் செய்திருக்கின்றன என்பதை நான் உணர்கிறேன்'' என்றார் அவர். பல அமெரிக்கர்களையும் கூட இவை அமைதியிழக்கச் செய்திருக்கின்றன. உலகில் அமெரிக்கா என்ன மாதிரியான ஒரு பாத்திரத்தை ஆற்ற வேண்டும் என்பது குறித்து எனது நாட்டில் உண்மையானதொரு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வெளிப்படையாகச் சொன்னால், இந்த விவாதம் எத்தகைய வடிவத்தை எடுக்கும் என்பது எனக்குத் தெரியாது.''


''நான் என்ன நம்புகிறேன் என்றால், நான் மிகைப்படுத்திக் கூறுகின்றேன் என நான் நினைக்கவில்லை, உலகத்தின் எதிர்காலம் ஒரு பெரிய அளவிற்கு, அமெரிக்காவில் இந்த விவாதம் எவ்வாறு தீர்க்கப்படுகிறது என்பதைப் பொறுத்தே அமையும்.''

ஒருகணம் இதில் கலந்துகொண்டவர்களை தலைகீழாய் மாற்றி வைக்கப்படுவதாய் கற்பனை செய்து பாருங்கள். ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் ஓர் உயர்நிலை அதிகாரி அமெரிக்காவுக்கு வந்து அமெரிக்க அதிகாரிகள் முன்பாக ஆஸ்திரேலிய பிரதமரை கண்டனம் செய்கிறார் என்றால், அவர் தன்து சொந்த அரசாங்கத்தின் தலைவரை அகற்றுவதற்கு ஆதரவு தேடுவதாகத் தானே முறையாய் பொருள்கொள்ளப்படும்.

ஒரு மூத்த செனட்டராய், குடியரசுக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளராய், சக்திவாய்ந்த செனட் இராணுவப் படை குழுவின் தலைவராய், ஓர் அட்மிரலின் மகனாய் அத்துடன் அவரே முன்னாள் இராணுவ அதிகாரியாக இராணுவத்துடன் எண்ணற்ற தனிப்பட்ட தொடர்புகள் கொண்டவராய், மெக்கெயின் அமெரிக்க அரசியலின் மிகவும் சக்திவாய்ந்த மனிதர்களில் ஒருவராய் பேசிக் கொண்டிருக்கிறார்.

அவர் தொடர்ந்தார்: ''ஜனாதிபதி ட்ரம்ப்பின் கீழ் அமெரிக்கா எங்கே சென்று கொண்டிருக்கிறது என்பது குறித்து உங்களில் பலருக்கும் நிறைய கேள்விகள் இருக்கும் என்பதை நான் அறிவேன். வெளிப்படையாகச் சொன்னால், பல அமெரிக்கர்களுக்கும் அந்த கேள்விகள் இருக்கின்றன... ஆயினும் ஜிம் மாட்டிஸ், எச்.ஆர்.மெக்மாஸ்டர், ஜோன் கெல்லி, மைக் போம்பியோ, டான் கோட்ஸ், ரெக்ஸ் டில்லர்சன் என பல கண்ணியமான, தகைமை வாய்ந்த மனிதர்களை அது பெற்றிருக்கிறது, அவர்கள் உங்கள் ஆதரவுக்கு தகுதி யானவர்கள், அது தேவைப்படுபவர்கள்.''

ஜோன் மெக்கெயின் குறிப்பிட்ட இந்த மனிதர்களில் சி.ஐ.ஏ இயக்குநர் மைக் போம்பியோ, தேசிய உளவு முகமை இயக்குநர் டான் கோட்ஸ் மற்றும் எக்ஸான் மொபில் தலைமை நிர்வாக இயக்குநரும் இப்போது வெளியுறவுச் செயலருமான ரெக்ஸ் டிலர்சன் ஆகியோருடன் பாதுகாப்புச் செயலர் ஜேம்ஸ் மாட்டிஸ், தேசிய பாதுகாப்பு ஆலோசகரான எச்.ஆர்.மக்மாஸ்டர் மற்றும் தாயகப் பாதுகாப்பு செயலர் ஜோன் கெல்லி ஆகிய மூன்று ஜெனரல்களும் இடம்பெற்றுள்ளனர். உதவி ஜனாதிபதி மைக் பென்ஸ் இனை மெக்கெயின் இதில் சேர்த்துக்கொள்ளவில்லை.



அமெரிக்க ஜனாதிபதி மற்றும் அவரது சொந்தக் கட்சியின் தலைவரை குறித்து மெக்கெயின் வெளிப்படையாக கூறுவதே இதுவென்றால், தனிப்பட்ட முறையில் அவர் எவ்வளவு கூறிக் கொண்டிருப்பார்? அவர் பேச்சை ஆரம்பிக்கையில், முந்தைய பல நாள்களின் சமயத்தில் பிரதமர் டர்ன்புல் மற்றும் அவரது குழுவினர் அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் ''ஆஸ்திரேலிய தூதரக அதிகாரிகள், நாடாளுமன்றவாதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள்'' ஆகியோரை அவர் சந்தித்தேன் எனகுறிப்பிட்டார். அமெரிக்க கடற்படை மற்றும் மரைன் படையின் அட்மிரல்கள் மற்றும் தளபதிகளுடனும் அவர் பேசியிருந்தார் என்பதில் எந்த சந்தேகமும் இருக்கமுடியாது.

ஆஸ்திரேலியாவை மெக்கெயின் தேர்ந்தெடுத்தமை ஒரு தற்செயலான விடயம் அல்ல. அமெரிக்கா சீனாவுடன் தனது மோதலை தீவிரப்படுத்திக் கொண்டிருப்பதோடு வட கொரியாவுடன் போரின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறது. ஆசிய/பசிபிக் அரங்கில் கட்டவிழும் மோதலில் ஒரு முக்கியமான மூலோபாய கூட்டாளியாக அது ஆஸ்திரேலியாவை பார்க்கிறது. 1975 இல் பிரதமர் கஃப் விட்லம் (Gough Whitlam) அகற்றப்பட்டமை 2010 இல் கெவின்ருட் அகற்றப்பட்டமை உள்ளிட்ட ஆஸ்திரேலிய அரசியலின் ஒவ்வொரு அம்சத்திலுமே அமெரிக்கா ஆழமாக தொடர்புபட்டுள்ளது.

''ஆகவே, அமெரிக்காவின் தீர்ப்பு என்ன என்பதுதான் உண்மையில் கேள்வியாக நிற்கிறது என்று ஒப்புக் கொண்ட மெக்கெயின், விமர்சிக்க நிறைய இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன் என்று ஒப்புக்கொண்டார்.''

''ஆகவே, அமெரிக்காவின் தீர்ப்பு என்ன என்பதுதான் உண்மையில் கேள்வியாக நிற்கிறது என்று ஒப்புக் கொண்ட மெக்கெயின், விமர்சிக்க நிறைய இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன்'' என்று ஒப்புக்கொண்டார். அதன்பின் அவர் அமெரிக்காவின் கொள்கைகளுக்கு எதிராக ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் பக்கமாய் நின்று கொண்டார்.

அமெரிக்கா பின்வாங்கிக் கொண்டாலும் கூட பசுபிக் கடந்த கூட்டு TPP விடயத்தில் முன்செல்வது தொடர்பாக ஆஸ்திரேலியா இப்போது ஜப்பான் மற்றும் மற்ற நாடுகளுடன் பேசிக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். அதை நான் உறுதியாக ஆதரிக்கவும் செய்கிறேன்'' என்றார் அவர். ''ஆகவே அதைத் தொடர்ந்து செய்யுங்கள் என்று நான் உங்களை வலியுறுத்துவேன். வருங்காலத்தில் ஏதோவொரு நாள், மாறுபட்ட சூழ்நிலைகளின் கீழ், அமெரிக்கா உங்களுடன் இணைவதற்கு தீர்மானிக்கும் என்று நான் நம்புகிறேன்.''

வெறுமனே ஒரு தற்செயலாக நிராகரிக்கப்பட முடியாத விதமாய், அடுத்த நாளே நியூயோர்க் டைம்ஸில் வெளியான ஒரு தலையங்கம் கிட்டத்தட்ட இதேபோன்றதொரு மொழியை பயன்படுத்தியிருந்தது. அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் பொறிவு குறித்து புலம்பியிருந்த டைம்ஸ், ஜேர்மன் சான்சலர் அங்கேலா மேர்கெலும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோனும் ட்ரம்ப் நிர்வாகத்திற்கு எதிரான அரசியல் பரந்ததரப்பை தொடக்கி சில நாள்களே ஆகியிருந்த நிலையில் அவர்களைப் பாராட்டியது.

டைம்ஸ் திகிலூட்டும் விதமாக நிறைவுசெய்தது, ''குறைந்தபட்சம் அமெரிக்கத் தலைமையின் தேவைக்கு திருவாளர் ட்ரம்ப் விழித்துக் கொள்ளும் வரையோ அல்லது இன்னொரு புத்திசாலித்தனமான ஜனாதிபதியால் அவர் பிரதியீடு செய்யப்படும் வரையோ நேட்டோவை உயிர்ப்புடனும் பொருத்தமானதாகவும் பராமரிப்பது திருமதி. மேர்க்கெல் மற்றும் மக்ரோனின் கைகளில் சென்று விட்டதாக இப்போதைக்கு தெரிகிறது.''

மெக்கெயினும் டைம்ஸும் யாருக்கு அழைப்புவிடுகின்றார்களோ அவர்களுக்கு இந்த மொழியின் அர்த்தம் நன்கு தெரியும்: அமெரிக்க அரசின் மிக உயர் மட்டத்தில் கத்திகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்த மட்டத்திற்கான அரசியல் பிரிவை மிகக் கூர்மையான சமூக நெருக்கடி நிலைமைகளின் கீழ் தான் எழ முடியும். ட்ரம்ப் நிர்வாகத்தின் கொள்கைகள் அமெரிக்காவின் உலகளாவிய அதிகாரம் மற்றும் மேலாதிக்க நலன்களில் இருந்தான ஒரு முழுமையான முறிவுக்கு அச்சுறுத்துகின்றன என்று அமெரிக்க அரசில் இருக்கும் சக்திவாய்ந்த கன்னைகள் நம்புகின்றன. அதேசமயத்தில், அமெரிக்காவிற்குள்ளாக வெடிப்பான சமூக நிலைகள் பெருகிச் செல்வது குறித்தும், இந்த முரண்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கான ஆளும் உயரடுக்கின் திறத்திற்கு அமெரிக்காவின் உலகளாவிய கௌரவம் தரைமட்டமாக வீழ்ச்சி காண்பதன் மூலம் மரணகரமாக குழி பறிக்கப்படுகிறது என்ற உண்மையை குறித்தும் அந்தக் கன்னைகள் கவலை கொண்டிருக்கின்றன.

அமெரிக்க அரசை பிளந்து கொண்டிருக்கும் மோதலானது, சதிகளில் ஈடுபட்டுள்ள அத்துடன் தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அரசியல்சட்டத்தை மீறிய வழிமுறைகளை பயன்படுத்துவதற்கும் தயாராய் இருக்கின்ற இரண்டு பிற்போக்கான கன்னைகளுக்கு இடையிலானதாக இருக்கிறது.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

அத்தியாயம் - 1

## ஆஸ்திரேலியாவில் எனது மூலவேர்கள்

எனது வெளிநாட்டுப் பயணம் எனது வாழ்வில் ஒரு சந்திப் பிரிவாக அமைந்தது. ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேறிய முப்பது ஆண்டுகளில் ஒரு தடவை மட்டும் நான் அங்கு சென்றிருக்கிறேன். ஆஸ்திரேலியாவிலிருந்து எனது வெளியேற்றம் எனது வாழ்வின் ஓர் அத்தியாயத்தை மூடியது; எனது சிந்தனையிலும் எனது ஈடுபாடுகளிலும் அடிப்படை மாற்றம் ஏற்பட வழிகோலியது. வாழ்க்கை நீரோட்டத்தில் மூழ்கி, உலகின் வெவ்வேறு பாகங்களிலிருந்து வருபவர்களுடன் ஊடாடும் போது, என்னை முழுமையாக ஆட்கொள்ளப்போகும் இந்த அற்புத அனுபவ வேறுபாடுகளிலிருந்து நான் பயன் அடைவதானால், எனது கருத்து, சிந்தனை, நடத்தை ஆகியவற்றுக்கு நேரும் சவால்களுக்கு முகம் கொடுப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

ஆஸ்திரேலியச் சிநேகிதிகள் இருவருடன் லண்டனையும், ஐரோப்பாவையும் சுற்றிப் பார்த்தேன். இந்தப் பயணம் முழுவதிலும் சரி, இங்கிலாந்தில் நான் சீவித்த போதும் சரி, பல ஆஸ்திரேலியர்களுடன் பழகக் கிடைக்காதமை எனது அதிஷ்டம். இல்லையென்றால் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு எனது ஆஸ்திரேலியக் கலாசாரத்தையும், உறவுகளையும் இடம்பெயர்ப்பதாக மட்டும் இருந்திருக்கும். மாறாக நான் தரிசித்த நாடுகளில் உள்ளூரவர்களோடு கூடி வாழவும் பணியாற்றவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தமை பெரிதுதானே? உதாரணமாக ரோம் நகரில் ஒரு மேட்டுக் கோபுர மாடிக் கட்டடத்தில் குடியிருந்து கொண்டு தனியார் இருநய மருத்துவமனை ஒன்றில் தாதித் தொழில் பார்த்தோம். பின்னர், மிகச் சொற்ப காலத்துக்கு நான்கு இத்தாலியப் பிள்ளைகளின் செவிலித் தாயாக நான் பணி புரிந்தேன். ஐரோப்பிய நாடுகளில் சீவித்து வேலை பார்த்தமையால், அங்கெல்லாம் மக்களின் கலாசார மற்றும் மொழி ஊடாட்ட வாழ்க்கையில் பங்கு பற்றவும் அதைக்கூர்ந்து அவதானிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. உல்லாசப் பயணப் பகுதிகளை மட்டும் தொட்டுத் தொட்டுத் தரிசித்து இந்த ஆழ்ந்த அனுபவத்தைப் பெற்றிருக்க முடியாது. கையில் உள்ள காசு கரைந்துவிட்டால் இங்கிலாந்து திரும்புவோம். அங்கே தொழில் முகவர் மூலம் வசதியான மருத்துவத் தாதிப் பணி புரிந்து கை நிறையச் சம்பாதித்துக் கொண்டு மீண்டும் ஐரோப்பாவின் மத்திய அல்லது வட பகுதிக்கு உலா புறப்பட்டுவிடுவோம். இரண்டு ஆண்டுகள் இந்த மாதிரியான வாழ்வு. அதன் பின் இரண்டு சிநேகிதிகளும் ஆஸ்திரேலியா திரும்ப, நான் எனது வாழ்வை மீளாய்வு செய்ய லண்டனில் தனியே விடப்பட்டேன்.

அந்நாடோடி வாழ்க்கை சில ஆண்டுகளே நிலைத்தது. ஆனால், எனக்குக் கிடைத்த அந்த அனுபவமே இணையற்றது. உலகமே அதற்கு ஈடாகாது. ஆனாலும் நான் அடுத்த கட்டத்துக்கு சென்றாக வேண்டும் என்று உணரும் காலம் வந்தது. மேலே படிக்கலாமா என்றும் சிந்தித்தேன். ஆனால், எனது தன்னம்பிக்கையின்மை உணர்வு இன்னமும் என்னை விட்டு அகலவில்லை. பட்டப் படிப்பை நாடுவது என்றாலும் ''ஏ'' லெவல் உயர் தரச் சித்திகள் இல்லை. ஆகவே, அது வீண் கனவு என்றே அஞ்சினேன் அதன் பின், ஓராண்டு கால மூலாதார உடல் நலப் பராமரிப்புக் கல்வி கற்கலாமா என்று சிந்தித்தேன். இதுவே எனது வாழ்வின் அடுத்த ஏணிப் படியாக அமைந்தது. உண்மையில் சமுதாயம் சார்ந்த இந்த உடல் நலப் பராமரிப்புப் பயிற்சி எனக்கு வெகுவாகப் பொருந்தி வந்தது. அடிப்படை மருத்துவ அறிவை மருத்துவத் தாதிப் பயிற்சி தந்திருந்தது; அதன்பின் மருத்துவிச்சிப் பயிற்சி மிகத் தேவையானதாக அமைந்தது. ஆனால், எனது ஐரோப்பிய பயணமேதான், பிற மக்கள், பிற கலாசாரங்கள், பிற இனங்களில் இருந்து நான் ஒதுங்கி வாழாது இருக்க உதவியது. அதுவேதான், பல இன சமுதாயம் ஒன்றில் சமுதாயப் பணி புரிய மிகத் தகுதி வாய்ந்தவளாக என்னை ஆக்கியது. ஒரு புலமைக் கல்வி கற்பதற்குத் தேவையான ''ஏ லெவல்'' தகைமைக்கு ஈடுகொடுக்கக்கூடியதாக எனக்கு ஏற்கனவே கிடைத்த பயிற்சித் தகைமைகளும் தொழில் அனுபவங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, சவுத்பாங் பல்கலைக் கழகத்தில் மூலாதார உடல் நல பராமரிப்புக் கல்விக்காக அனுமதிக்கப்பட்டேன். உடல் நல தரிசித்தல் புலமைக்கான ஓராண்டுக் கல்வி இது. மருத்துவ நிலையங்களில் இருந்து வெளியே சென்று, சமுதாயத்துக்குள் நுழைந்து ஆரம்ப உடல் நல பராமரிப்புப் பணியாளராகக் கடமை புரிவதற்குத் தேவையான பயிற்சியையும் ஆற்றலையும் எனக்கு இது ஊட்டியது.

ஒரு பெரிய வட்டகையில் பணி நியமனம் கிடைத்தது. வெவ்வேறு சமூக மட்டங்களும் கலாசாரங்களும் உள்ள பகுதி இது. சிக்கலான, அதே நேரம் படிமானமாகாத பல பிரச்சினைகளை நான் எதிர்நோக்க நேர்ந்தது. ஒரு புறம் மூலாதார உடல் நலப் பராமரிப்பு ஏற்பாட்டு அமைப்பு, மறுபுறம் நான் தீர்க்க வேண்டிய சமூகப் பிரச்சினைகள். இவற்றிடையே நான் ஊடாட வேண்டிய நிர்ப்பந்தம். இரண்டுமே சுவையான அனுபவங்கள், அதே நேரம் சவாலாகவும் இருந்தன. எனது மனதில் புதிய கேள்விகளையும் அவை தொடுத்தன. அரசின் நிதி தொடர்பான கொள்கைகள் சரியா? முன்னுரிமைகள் சரியா? என்று வினாத் தொடுத்தேன். அரச சேவையின் ஆற்றலின்மையைக் கண்டித்தேன். ஆட்களைப் பற்றி அறிக்கை எழுதி, வகைப்படுத்தி, பட்டியலிடுவது தொடர்பான ஒழுங்குமுறை எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை. அதாவது நிறுவன அமைப்பின் மீதே நான் கேள்விகள் தொடுத்தேன் எனலாம். சமூக அமைப்புகள் தொடர்பான ஆழமான அறிவு பெறுவேன் என்றால், நான் கேட்கும் கேள்விகளுக்கும் சிந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கும் தெளிவு கிடைக்கும். அதுவே எனக்கு நன்மை பயக்கும் என்றும் நம்பினேன். சமுதாய ஓட்டம் தொடர்பான எனது அறிவு போதாது என்று என் உள் உணர்வு கூறியது. ஆகவே, துணிச்சலைத் திரட்டி, சமூக விஞ்ஞானப் பட்டப் படிப்புக்கு விண்ணப்பிக்கத் தீர்மானித்தேன். சமூகக் கருவறை தொடர்பாக, ஒழுங்கான, நேர்த்தியான அறிவு ஆழத்துக்கு ஈடு கொடுக்கும் ஆற்றல் எனக்கு உண்டா என்ற சந்தேகம் என்னைக் குடைந்தது. ஒரு பட்டப் படிப்புக்கான சவாலை எதிர்கொள்ளும் தகைமை எனக்கு இருப்பதாக சவுத்பாங்க் பல்கலைக்கழகம் கருதி, சமூக விஞ்ஞானப் பட்டப்படிப்புக்காக என்னை ஏற்றுக் கொண்டபோது, மகிழ்ச்சி கரை புரண் டோடியது. அறிவு நிரம்பியதும், அறிவு ஆழத்தோடு நான் புழங்க வேண்டியதுமான முற்றிலும் வேறுபட்ட ஒரு சமூகச் சூழலுக்குள் நான் நுழைகின்றமை, எனது இருபத்தியேழு வயதில் எனக்கு ஒரு சவாலே. ஆனாலும் அதற்காக ஆவலோடு காத்திருந்தேன்.

சவுத்பாங்க் பல்கலைக் கழகத்தில் சமூக விஞ்ஞானப் பட்டப்படிப்புப் பாட விதானம், பெரிய பரப்பாக இருந்தது. குறிப்பாக சமூகக் கோட்பாட்டியல் அதிக அறிவு ஆழம் கொண்டிருந்தது. சமூகப் பரிமாணங்களை ஆழ, அகலக் கற்றோம். கைத்தொழில் உலகத்துக்கு முந்திய காலப்பகுதியில் இருந்து, முதலாளித்துவத்துக்குப் பிந்திய காலம் வரையுள்ள பரப்பை அலசினோம். ஆபிரிக்காவில் இருந்து ஆசியா வரையும், பின் அமெரிக்கா வரையும் உள்ள கண்டங்களையும், நாடுகளையும், வரலாற்று அடிப்படையில் அளவிட்டோம். தனி மனித உளப் பாங்கிலிருந்து, கிட்லர் கால ஜேர்மனியின் தேசியவாத பேரெழுச்சிகள் வரை சமூக அமைப்புகளின் கருத்துலகங்களை ஆராய்ந்தோம். விரிவுரையாளர்கள் பல்வேறு அரசியற் கருத்துகளைக் கொண்டவர்களாக இருந்தனர். ஆயினும் இடதுசாரி அரசியற் கருத்தைக் கொண்டவர்களே ஆதிக்கம் செலுத்தினர். சுருங்கச் சொன்னால் எனது பட்டப்படிப்பு கணிசமான அளவு அரசியல் அறிவையும் மற்றும் விஞ்ஞானக் கோட்பாட்டுக்கல்வியையும் ஊட்டியது. இது, எனக்குப் பெரிதும் உதவியது. நான் பாலாவைச் சந்தித்தமையும் சவுத்பாங் பல்கலைக்கழகத்திலேயேதான். அப்போது அவர் தமது கலாநிதி ஆய்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அத்துடன் பகுதிநேர பல்கலைக்கழக மேற்பார்வை ஆசானாகவும் பணி புரிந்து கொண்டிருந்தார். அப்போது நான் இரண்டாம் ஆண்டில் பயின்றேன். பல்கலைக்கழகத்தில் எமது பழக்கம் உளப்பூர்வமாகக் காதலாக மலர்ந்து திருமணத்தில் கனிந்தது. எனது அறிவாற்றலைக் கூர்மைப்படுத்தவும், சிக்கலான சமூகக் கோட்பாடுகளை நான் புரிந்து கொள்ளவும் பாலா உதவினார். உலகின் வெவ்வேறு பாகங்களிலிருந்து வந்த மாணவர்கள் அங்கே இருந்தார்கள். ஏதோ ஒரு போராட்டத்தை ஆதரிப்பவர்களாக அல்லது அது பற்றி பரப்புரை புரிபவர்களாக அவர்கள் இயங்கினார்கள். இதனால் பல்கலைக்கழகம் ஒரு சுறுசுறுப்பான அரசியற் செயற்பாட்டுத் தேன்கூடாக அமைந்தது. உலகில் இடம்பெறும் வெவ்வேறு சமூக மற்றும் தேசிய அடக்குமுறைகள் பற்றிய அறிவையும் இந்தச் சூழல் எனக்கு ஊட்டியது. இதுவே புரட்சிகளின் காலமாகவும் திகழ்ந்தது. தீவிர இடதுசாரி அரசியலும், தொழிற் சங்கப் போராட்ட எழுச்சிகளும் பிரித்தானியாவில் தலை விரித்து ஆடிக் கொண்டிருந்தன. ஆபிரிக்காவிலும், மத்திய மற்றும் தென் அமெரிக்காவிலும் உள்ள பல மூன்றாம் உலக நாடுகள், விமுதோடிய குடியேற்றவாத அடக்குமுறைகளிலிருந்தும், பேரரசுகளின் பொருளாதார உறிஞ்சல்களிலிருந்தும், சுதந்திரம் பெறுவதற்காக தேசிய விடுதலைப் போராட்டங்களைத் தொடுத்து நின்றன. ஒடுக்கப்பட்டவர்கள் மட்டில் எமக்கு உள்ளார்ந்த அனுபவம் இருந்தது. ஆகவே, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC), சிம்பாவே ஆபிரிக்க தேசிய ஒன்றியம் (ZANU), தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் அமைப்பு (SWAPO), கிழக்குத் தீமோரியர், எரித்திரியர், சந்தனிஸ்தா, பாலஸ்தீனவிடுதலை அமைப்பு(PLO), எல் சல்வடோரியர், சிலியர் போன்றோரின் பேரணிகளிலும் கூட்டங்களிலும் தீவிரமாகக் கலந்து கொண்டோம். பிரித்தானியாவின் கம்யூனிஸ்ட் கட்சியுடன் கூடிப் பணி புரிந்தோம். நெல்சன் மண்டேலாவின் விடுதலைக்காக பேரணி நடத்தினோம். அணு ஆயுத ஒழிப்பு இயக்கத்தை ஆதரித்தோம். இந்தக் கால கட்டத்தில் பிரித்தானியாவில் தலை தூக்கிய இனவாதத்தை வெறுத்தோம். எமது வீட்டில் குழுக் கலந்துரையாடல்களுக்குப் பல தரப்பினரையும் அழைத்தோம். விடுதலை அமைப்புகளின் பிரதிநிதிகளையும் அங்கு வரச் செய்தோம். ஒடுக்கு முறை தொடர்பான எனது சொந்த உணர்வுகள் பலவற்றை பெண்ணியம் நிரற்படுத்தியது. உலகத்தோடு நான் தொடர்பு பேணும்போது, பெண் என்ற வகையில் எனது உணர்வுகள் என்ன, அனுபவங்கள் என்ன என்பதனை வெளிப்படுத்துவதற்கு வார்த்தைகளையும் வடிகால் அமைத்துத் தந்தது. எனது தளர்வான மனப்போக்குகள் உறுதியான சிந்தனைகளாகத் திரண்டன. இந்தச் சூழலிலேதான். இந்தச் சிந்தனைகளே ஒரு மூன்றாவது உலக நாட்டின் தேசிய விடுதலை இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்திலே பங்கெடுக்க இறுதியாக என்னை இட்டுச் சென்றன.

தொடரும்...

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.


அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்தூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.





# ரொறன்ரோவில் சிவகுமாரன் நினைவுக் கிண்ணப்போட்டி



தமிழ் இளையோர் அமைப்பும் கனேடியத் தமிழ் விளையாட்டுத் துறையும் இணைந்து நடத்திய தியாகி பொன்.சிவகுமாரனின் நினைவுக்கிண்ணப் போட்டிகள் கடந்த 17ஆம் திகதி கனடா, ரொறன்ரோவிலுள்ள லாமோறெக்ஸ் விளையாட்டுத் திடலில் நடைபெற்றன.

தியாகி பொன்.சிவகுமாரனுக்கான அகவணக்கம் செலுத்திய பின் ஆரம்பமாகிய போட்டியில் 14 அணிகள் பங்குபற்றின. 8 வயது முதல் பெரியோர் வரையில் அனைத்து அணிகளும் போட்டிகளில் மிகவும் உற்சாகத்துடன் பங்குபற்றின.





# ஜேர்மனியில் நடைபெற்ற தியாகி சிவகுமாரனின் நினைவு நாள் நிகழ்வுகள்






தியாகி பொன் சிவகுமாரனின் நினைவு நாள் ஜேர்மனியில் பிராங்க்புர்ட் நகரத்தில் கடந்த வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் மாணவர் எழுச்சி நாளாக சிவகுமாரனின் நினைவு நிகழ்வு அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் வெள்ளைத் திரையில், பல வர்ணங்களில் தங்களது கைரேகையைப் பதிந்து சென்றனர். அத்துடன் மக்களுக்கு ஈழத்தில் பௌத்த பேரினவாத அரசால் ஈழத்தமிழர்கள் மீது நடத்தப்பட்டு வரும் இன அழிப்பு தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

# நெதர்லாந்தில் நடைபெற்ற தமிழர் விளையாட்டுத் திருவிழா



நெதர்லாந்தில் தமிழர் விளையாட்டுத் திருவிழா கடந்த 17 ஆம் திகதி உத்திரக்ற் நியூவகெய்ன் என்னும் நகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. காலை 9 மணியளவில் ஆரம்பமாகிய நிகழ்வில் முதலில் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு பின்னர் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து நெதர்லாந்து தேசியக் கொடியும் அடுத்து தமிழீழத் தேசியக் கொடியும் ஏற்றப்பட்டன. பின் தியாகி சிவகுமாரனுக்கு நெதர்லாந்து இளையோர் அமைப்பு பொறுப்பாளரால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மலர் வணக்கமும் அகவணக்கமும் செலுத்தப்பட்டு விளையாட்டு ஆரம்பமாகியது.

இந்த விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் கரப்பந்தாட்டம் மற்றும் சிறுவர்களுக்கான மெய்வன்மைப் போட்டிகளும் இடம்பெற்றன. அத்துடன், தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான தாச்சி, முட்டியுடைத்தல் சங்கீதக் கதிரை போன்ற பார்வையாளர்கள் போட்டிகளும் நடைபெற்றன.

வெகுசிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் வெற்றி பெற்ற கழகங்களுக்கும் வெற்றியீட்டிய வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வெற்றிப் பதக்கங்களும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டமையைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடி இறக்கப்பட்டு நிகழ்வுகள் நிறைவடைந்தன. (எ)

# சிறப்புற நடந்த தமிழ்ச்சோலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி!







பிரான்ஸ் செல் பிராங்கோ தமிழ்ச்சங்கம், செல் தமிழ்ச்சோலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த 18 ஆம் திகதி பரிஸின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்றான செல் பகுதியில் ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்றன.

நிகழ்வில் பொதுச்சுடரை தமிழ்ச்சங்க விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பதி ஏற்றிவைக்க, பிரெஞ்சுக் கொடியை செல் தமிழ்ச்சோலை நிர்வாகி திருமதி மாலினி பீலிக்ஸும் தமிழீழத் தேசியக் கொடியை பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின், தமிழர் விளையாட்டுத் துறைச் செயலாளரும் செல்.பிராங்கோ தமிழ்ச் சங்கத் தலைவருமான நிமலனும் ஏற்றிவைத்தனர்.

ஒலிம்பிக் சுடர் ஏற்றப்பட்டு, விளையாட்டு வீரர்கள், நடுவர்களின் சத்தியப் பிரமாணத்தைத் தொடர்ந்து போட்டிகளைத்தமிழர்விளையாட்டுத்துறை உறுப்பினரும் மெய்வன்மைப் போட்டி முகாமையாளருமான இ.இராஜலிங்கம் ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து தமிழ்ச்சோலை மாணவ,மாணவிகளின் அணிநடை இடம்பெற்றது. எல்லாளன், பண்டாரவன்னியன், சங்கிலியன் ஆகிய மூன்று இல்லங்களிடையே மிகவும் விறுவிறுப்பாகப் போட்டிகள் இடம்பெற்றன. குறித்த மூன்று இல்லங்களும் தமது இல்லங்களைச் சிறப்பாக அலங்கரித்திருந்தனர்.

பந்தெறிதல், நீர்நிரப்புதல், சாக்கோட்டம், கயிறடித்தல், கலப்பஞ்சல், கயிறிழுத்தல், சங்கீதக் கதிரை, இனிப்புச் சேகரித்தல், ஓட்டம் போன்ற பல்வேறுபட்ட விளையாட்டுக்கள் காண்போரைக் கவர்ந்திருந்தன.

தொடர்ந்து வெற்றிபெற்ற மாணவர்களுக்கான நினைவுப் பதக்கமும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டன. தாயக மக்களின் நலன்கருதிய அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பும் குலுக்கப்பட்டு மூன்று பேருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (எ)

## நீர்வேலி முன்பள்ளி விளையாட்டு விழா

கோப்பாய், ஜூன் 22

நீர்வேலி பாலர் பகல் விடுதி மற்றும் முன்பள்ளி ஆகியவற்றின் சிறுவர்களுக்கான விளையாட்டு விழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய முன்றிலில் நடைபெறும்.

முன்பள்ளித் தலைவர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.பத்மகுமார் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக திரு.திருமதி ஜீவா வாசுகி தம்பதியரும் கலந்து கொள்வர். (ச)

# பாலியாற்றைப் பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுங்கள்!

## நாடாளுமன்றில் வலியுறுத்தினார் டக்ளஸ் எம்.பி.

கொழும்பு, ஜூன் 22

வடக்கு மாகாணத்தின், பாலியாற்றுக் கரையோரங்களில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதற்கும், தற்போது அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சேதங்களை நிவர்த்தி செய்து, அதனைப் பாதுகாப்பதற்கும், நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்சாவிடம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தவை வருமாறு:-

வரலாற்று ரீதியிலும் புகழ்பெற்ற, வடக்கின் நீர்த் தேவையை ஓரளவு பூர்த்தி செய்கின்ற பாலியாற்றைப் பாதுகாப்பதற்காக மேற்படி ஆற்றின் இரு மருங்குகளிலும் பல கிலோ மீற்றர் தூரம் வரையில் அரசால் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அந்தக்காணிகளில் முதிரை, பாலை, கருங்காலி, மருதம் போன்ற மரங்கள் பெரியளவில் வளர்ந்து இயற்கையையும், மண்ணரிப்புகள் ஏற்படாமலும் பாதுகாத்து வருகின்றன என்று தெரிய வருகின்றது. இந்த நிலையில், தற்போது பலர் அந்தப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து, காட்டு மரங்களை வெட்டியும், ஆற்றின் கரையோரப் பகுதிகளை பெரியளவில் சேதப்படுத்துகின்றனர். அத்துடன் சட்ட விரோதமான முறையில் பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு, ஆற்று நீரைப் பயன்படுத்தி வருகின்றனர்.

மேற்படி காணிகள் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உட்பட்டது என்று அடையாளப்படுத்தும் வகையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் எல்லைக் கற்கள் நடப்பட்டுள்ளன. அதனையும் மீறியே மேற்படி சட்ட விரோத செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக மேற்படி ஆறு பல்வேறு பாதிப்புகளுக்கு உட்பட்டு, அதனை நம்பியிருக்கின்ற மக்களுக்கு நீர்வளம் கிடைக்காமல் போகக்கூடிய அபாயமும் பெரிய இயற்கை அழிவுகளும் ஏற்பட்டுள்ளன என்று அந்தப்பகுதி மக்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.



வடக்கில் அடிக்கடி ஏற்படுகின்ற வறட்சியான கால நிலைக்கு முன்டாக இத்தகைய நீராதாரங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இன்றியமையாததாக இருக்கும் நிலையில், மேற்படி சட்ட விரோதமான செயற்பாடுகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.-என்றுள்ளது. (எ)

# இலங்கையில் மீன் உற்பத்தியை முன்னெடுக்க ஆர்வம் காட்டுகின்றனர் சீன முதலீட்டாளர்கள்



கொழும்பு, ஜூன் 22

இலங்கைக் கடற்பரப்பில் மீன் உற்பத்தியை முன்னெடுப்பதற்கான முதலீடுகளை மேற்கொள்ள சீன முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

சீன முதலீட்டாளர்கள், மீன்பிடி மற்றும் நீரியல் வள இராஜாங்க அமைச்சர் திலிப் வேத ஆராய்ச்சி ஆகியோருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மீன் உற்பத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளுக்கு முதலீடுகளை வழங்க தாம் தயாராகவுள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்.

சீனாவிலுள்ள மேலும் சில முதலீட்டாளர்களையும் இதன் பொருட்டு அனுப்பி வைக்க முடியும் என்று இந்தக் கலந்துரையாடலின் போது சீன முதலீட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர் என்று, மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

# இனவாத வன்முறைகளுக்கு தயாராகும் கடும்போக்குவாதிகள்

## அரசை எச்சரிக்கிறது சமாதானப் பேரவை

கொழும்பு, ஜூன் 22

பெரியளவிலான இனவாத வன்முறைகளுக்கு கடும்போக்குவாதிகள் தயாராகி வருகின்றன என்று தேசிய சமாதான பேரவை அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பேரவை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான தாக்குதல்கள் அண்மைக்காலமாக மேலோங்கி இருக்கின்றன.

இவ்வாறான தாக்குதல்கள் ஊடாக, அடிப்படைவாதிகள் பெரிய இன வன்முறைக்கான சோதனைகளை நடத்தி வருவதைப் போல் தென்படுகின்றன.

எனவே, அரசு இப்போதே இந்த விடயத்தில் தலையிட்டு வன்முறைகளுக்கான அடிப்படைக் காரணிகளைத் தணிக்க வேண்டும்.

குறிப்பாகச் சட்ட ஒழுங்குகளை சீராக நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றுள்ளது. (எ)

# அக்கராயனில் சட்டவிரோத மணல் அகழ்வு; தடுக்க பொலிஸ் காவலரண்கள் அவசியம்!

## பொது அமைப்புகள் கோரிக்கை


கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி, அக்கராயன் ஆற்றுப் படுகைகளிலும் சுபாஸ் குடியிருப்பு, மணியங்குளத்தின் பின்புறம் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு இரு இடங்களில் பொலிஸ் காவல் அரண்களை அமைக்குமாறு அக்கராயன் பகுதி பொது அமைப்புகள் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

அக்கராயன் அணைக்கட்டு வைரவர் கோவிலடியிலும், ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டம் பிள்ளையார் கோவிலடியிலும் காவல் அரண்களை அமைப்பதன் மூலம் அக்கராயன் அணைக்கட்டு வீதி வழியாக திருமுறிகண்டி வீதி வழியாக வெளி இடங்களுக்கும், ஸ்கந்தபுரம் முக்கொம்பன் வீதி வழியாக யாழ்ப்பாணத்துக்கும் கொண்டு செல்லப்படும் மணலைக் கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவிக்கின்றன பொது அமைப்புகள்.

அக்கராயன் பொலிஸார் வழங்குகின்ற ஒத்துழைப் பின் அடிப்படையில்தான் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த முடியும். மணல் சட்டவிரோதமான முறையில் வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. இது தொடர்பாக ஜனாதிபதிக்குக் கூட அக்கராயன் பொது அமைப்புகளால் நேரடியாக மனுக் கையளிக்கப்பட்டும் மணல் அகழ்வு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை. இதன் காரணமாக அக்கராயன் குளத்தின் கீழான விவசாய முயற்சிகள் எதிர்காலத்தில் பெரும் அழிவை எதிர்கொள்ளும்.

அக்கராயன் குளத்தின் அணைக்கட்டில் இருந்து குறைந்தது மூன்று கிலோ மீற்றருக்கு அப்பால் மணல் அனுமதிகளை மாவட்ட செயலகத்தின் அதிகாரிகள் நேரடியாக வருகை தந்து பார்வையிட்டு வழங்க வேண்டும் என்று தொடர்ச்சியாக அக்கராயன் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்து வரும் நிலையிலும் நாள் தோறும் டிப்பர்களில் மணல் கொண்டு செல்லப்படுவதன் காரணமாக



கிராமம் பெரும் அழிவுகளை எதிர்கொண்டுள்ளது என்று கவலை தெரிவிக்கின்றன. (எ)

ஜனாதிபதித் தேர்தல் ஆதரவு:

# பா.ஜ.கவை சமரசம் செய்து கொள்ளும் சசிகலா–தினகரன் திட்டம் தவிடுபொடி!



சென்னை, ஜூன் 22

ஜனாதிபதித் தேர்தலில் பா.ஜ.கவை ஆதரிக்கின்றமை தொடர்பில் முதல்வர் பழனிச்சாமியிடம், பிரதமர் மோடி பேசி ஆதரவை உறுதி செய்துவிட்டார். இதன் மூலம், அ.தி.மு.க. - சசிகலா அணியின் தலைமை, முதல்வர் பழனிச்சாமிதான் என்பதை, பா.ஜ.க. வெளிப்படுத்தி உள்ளது. இதனால், ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாக வைத்து, பா.ஜ.கவை சமரசம் செய்து கொள்ளலாம் என்று சசிகலாவும், தினகரனும் போட்ட திட்டம் தவிடு பொடியாகி உள்ளது.

"பா.ஜ.க. வேட்பாளருக்கு ஆதரவு கொடுப்பது பற்றிக் கட்சித் தலைமை முடிவு செய்யும்'- என,லோக்சபா துணை சபாநாயகர் தம்பிதுரை தெரிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து, 'சசிகலா, தினகரன் ஆகியோரிடம் தான், பிரதமர் ஆதரவு கேட்க வேண்டும்' என,தினகரன் ஆதரவுச் சட்டசபை உறுப்பினர்கள் சிலர் போர்க்கொடி தூக்கி உள்ளனர். இந்த நிலையில், நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை பெங்களூர் சிறையில் உள்ள சசிகலாவை, தம்பிதுரையும், தினகரனும் அடுத்தடுத்து சந்தித்தனர். அதனை அடுத்து, சட்டசபை உறுப்பினர்கள் செந்தில்பாலாஜி, பழனியப்பன், முருகன், கென்னடி, பாலசுப்ரமணியம் ஆகியோரும், சசிகலாவை சந்தித்தனர்.

இந்த சந்திப்புத் தொடர்பில் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கையில்-

'முதல்வர் பழனிச்சாமி மீது, தினகரன் கடும் அதிருப்தியில் உள்ளார். அத்தோடு, ஜனாதிபதி தேர்தலில் முதல்வர் பழனிச்சாமியிடம் பிரதமர் மோடி ஆதரவு கேட்டமையையும் தினகரனால் ஜீரணிக்க முடியவில்லை. பா.ஜ.கவுக்கு ஆதரவளிக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் தினகரன் உள்ளார்.

இந்த நிலையில், பெங்களூர் சிறையில், சசிகலாவைச் சந்தித்து பேசினார் தம்பிதுரை. அப்போது அவர் - 'தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் பா.ஜ.கவுக்கு எதிராக வாக்களித்தால் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படும். முதல்வர் பழனிச்சாமி தலைமையிலான அரசு மீது, நம்பிக்கையில்லாப்பிரேரணையை எதிர்க்கட்சிகள் கொண்டு வருவதற்கு வாய்ப்பு உருவாகிவிடும். ஆட்சிக்கு ஸ்திரத்தன்மை இல்லை என்ற நிலை ஏற்படும். எனவே, தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்களை, பா.ஜ.கவுக்கு ஆதரவாக வாக்களிக்க உத்தரவிடுங்கள்'- என ஆலோசனை கூறியுள்ளார்.

தம்பிதுரையைத் தொடர்ந்து சசிகலாவை தினகரன் சந்தித்தார். அப்போது, தினகரன், ' என் ஆதரவு,

34 எம்.எல்.ஏக்களும், ஐந்து எம்.பிக்கள், பா.ஜ.கவுக்கு எதிராக வாக்களிக்கத் தயாராக உள்ளனர். பா.ஜ.கவை ஆதரித்தாலும், நமக்கு சாதகமாக அவர்கள் செயற்படப் போவதில்லை; எனவே, அவர்களை எதிர்த்து அரசியல் செய்தால் தான் கட்சியைக் கைப்பற்ற முடியும்'-எனக் கூறியுள்ளார்.

-இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்புக்கு பின் ஊடகவியலாளர்களிடம் தினகரன் பேசுகையில், 'ஜனாதிபதி தேர்தலில், யாருக்கு ஆதரவு என்பதை, சசிகலா தான் முடிவு செய்வார்"- எனக் கூறியுள்ளார்.

அவரது பேச்சு கட்சியில் புதிய குழப்பத்தை உருவாக்கி உள்ளது. முதல்வர் பழனிச்சாமியின் ஆட்சிக்கு ஆதரவாக உள்ள எம்.எல்.ஏக்கள், அவரின் பேச்சுக்குக் கட்டுப்படுவார்களா? சசிகலா பேச்சுக்கு கட்டுப்படுவார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது. (ச)

## அந்நிய செலாவணி மோசடி: சசியிடம் நேற்று விசாரணை!

குற்றச்சாட்டுப் பதிவு

பெங்களூர் சிறையில் இருக்கும் சசிகலாவிடம், அந்நிய செலாவணி மோசடி வழக்கு விசாரணை காணொலி மூலம் நடத்தப்பட்டது. இதன்போது, அவர் மீது குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டது.

அமலாக்கத்துறையினர் தொடர்ந்துள்ள மேற்படி வழக்கு எழும்பூர் பொருளாதார குற்றவியல் நீதிமன்றத்தில்,நீதிபதி ஜாஹிர் ஹூசைன் முன்னிலையில் நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சசிகலா சிறையிலிருந்தவாறே காணொலி சாட்சி மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இந்த நிலையில், அவரிடம் சுமார் 50 நிமிடங்கள் விசாரணை நடத்தப்பட்டது.

இதன்போது , தன் மீதான குற்றச்சாட்டுகள் பொய்யானவை என சசிகலா மறுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 1996 ஆம் ஆண்டு 'சூப்பர் டூப்பர்' தொலைக்காட்சி என்னும் நிறுவனத்துக்காக வெளிநாடுகளில் இருந்து உபகரணங்கள் வாங்கியபோது, அந்நிய செலாவணி மோசடி இடம்பெற்றது என சசிகலா மற்றும் அவரது உறவினர்களான சுதாகரன் மற்றும் பாஸ்கரன் ஆகியோர் மீது அமலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## யோகாவில் 3 லட்சம் பேர்; கின்னஸ் சாதனை!



சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு குஜராத் மாநிலத்தில் ஒரே இடத்தில் மூன்று லட்சம் பேர் இணைந்து யோகாசனத்தில் ஈடுபட்டு கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

குஜராத் மாநில தலைநகரான அகமதாபாத்தில் உள்ள பெருந்திடலில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற இந்த மாபெரும் யோகாசன நிகழ்ச்சியை யோகாசன கலை குரு பாபா ராம்தேவ் தலைமையேற்று நடத்தினார்.

இந்த நிகழ்வில் பா.ஜ.க. தேசிய தலைவர் அமித் ஷா, குஜராத் மாநில முதலமைச்சர் விஜய் ருபானி, துணை முதலமைச்சர் நிதின் பட்டேல், முன்னாள் முதலமைச்சர் ஆனந்திபென் பட்டேல் மற்றும் ஏராளமான பா.ஜ.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் முக்கிய தலைவர்கள், பிரபல தொழில் அதிபர்கள் , பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதற்கு முன்னர் டில்லி ராஜபாதையில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் 35 ஆயிரத்து 985 பேர் ஒரே இடத்தில் அமர்ந்து யோகாசனத்தில் ஈடுபட்டமை உலக சாதனை புத்தகமான கின்னஸில் இடம் பெற்றது. அந்தச் சாதனையை அகமதாபாத் நகரில் நடைபெற்ற யோகாசன நிகழ்ச்சி முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



41 பயணிகளுடன் அரச பஸ்ஸில் தீ:

## சாரதியின் முன்னெச்சரிக்கையால் பெரும் அசம்பாவிதம் தவிர்ப்பு!

விழுப்புரத்திலிருந்து 41 பயணிகளுடன் சென்னை நோக்கிச் சென்ற அரச பஸ் ஒன்று திடீரென தீப்பிடித்தது. சாரதியின் முன்னெச்சரிக்கையால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

இன்ஜினில் திடீரெனத் தீப்பிடித்ததைக் கண்ணுற்ற சாரதி சற்றும் தாமதிக்காமல் பஸ்ஸை நிறுத்தி, பயணிகள் அனைவரையும் பாதுகாப்பாக இறக்கிவிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து பஸ்ஸை சற்று தள்ளி நிறுத்துவதற்காக மீண்டும் இயக்க முற்பட்ட போது தீ மளமளவென பரவியது. இதனால் அதிர்ச்சி அடைந்த சாரதி உடனடியாக பஸ்ஸில் இருந்து கீழே குதித்துத் தப்பினார். இந்த நிலையில், பஸ் முழுவதுமாகத் தீப்பிடித்து எரிந்துள்ளது. (ச)

## இந்தியாவுடன் முழு உலகையும் யோகாவின் புகழ் இணைக்கும்!



பிரதமர் மோடி பெருமிதம்

லக்னோ, ஜூன் 22

யோகாவின் புகழ் இந்தியாவுடன் முழு உலகத்தையும் இணைக்கும் எனப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேசம் லக்னோவில் உள்ள ரமாபாய் அம்பேத்கர் மைதானத்தில் நேற்றுப் புதன்கிழமை யோகா தின விழா இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யோகா இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. இந்தியாவுக்கு வெளியே யோகாவின் புகழ் பிரமாண்டமாக உள்ளது. இது இந்தியாவுடன் உலகத்தை இணைத்துள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் பல கல்வி நிறுவனங்கள் யோகா மையங்களை திறந்துள்ளமையைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். இதனால் யோகா ஆசிரியர்களின் தேவை அதிகரித்துள்ளது. இந்திய யோகா ஆசிரியர்களுக்கு உலகம் முழுவதும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. உலக மக்கள் யோகாவைக் கற்றுக்கொள்ள இந்தியர்களை எதிர்பார்க்கின்றனர்.-என்றார். (ச)

### பங்களாதேஷில் 48 மணி நேரத்தில்

# மின்னல் தாக்குதலால் 22 பேர் பரிதாபச் சாவு!

டாக்கா, ஜூன் 22


பங்களாதேஷில் மின்னல் தாக்குதல்களுக்கு உள்ளாகி, 48 மணித்தியாலத்தில் 22 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் அந்த நாட்டு மக்கள் மத்தியில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த 18, 19 ஆகிய திகதிகளில் இடம்பெற்ற மின்னல் தாக்குதல்களிலேயே 22 பேர் உடல்கருகி உயிரிழந்தனர் என்று பங்களாதேஷ் அரசு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

பங்களாதேஷில் ஆண்டுதோறும் மின்னலுக்கு நூற்றுக்கணக்கானோர் உயிரிழக்கின்றமை தொடர்கதை ஆகி வருகிறது. கடந்த ஆண்டு அங்கு மின்னல் தாக்கி 200 பேர் உயிரிழந்தனர். குறிப்பாக கடந்த ஆண்டு மே மாதம் மின்னல் தாக்கி ஒரே நாளில் 82 பேர் பலியாகினர்.

இப்போதுள்ள பருவநிலை மாற்றம், இந்த மின்னல் தாக்குதலை மேலும் அதிகரிக்கச்செய்து வருகிறது. காடுகளை அழித்தமை, பனைமரம் போன்ற உயரமான மரங்களை வெட்டியமை போன்ற செயற்பாடுகளே மின்னல் தாக்கத்துக்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது.

கடந்தவாரம் பங்களாதேஷில் ஏற்பட்ட மண்சரிவுகளில் சிக்கி 160 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ச)





### போர் நிறுத்த உடன்படிக்கை மீறல்:

# மத்திய ஆபிரிக்காவில் நடந்த தாக்குதல்களில் 50 பேர் பலி!




மத்திய ஆபிரிக்காவில் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு இலக்காகி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 50 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய ஆபிரிக்க குடியரசில் நிலவும் வன்முறையை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் கிளர்ச்சியாளர்களுக்கும், அரசுக்கும் இடையே கடந்த திங்கட்கிழமை சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

ஆனால், மேற்படி போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட மறுதினமே உடன்படிக்கையை மீறும் வகையில் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். உயிரிழந்தவர்களில் 42 பேரது சடலங்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. பல பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மோதல்களின் போது பல வீடுகள் சூறையாடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## சவுதிக்கு புதிய இளவரசர்!



சவுதி அரேபியாவின் புதிய இளவரசராக முகமது பின் சல்மான் நியமிக்கப்பட்டுள்ளார்.

சவுதி அரேபியாவின் இளவரசராக இருந்த முகமது பின் நயிப்பின் அப்துல்யாஸிஸ் (வயது- 57) நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக புதிய இள வரசர் சல்மான் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய இளவரசரைத் தேர்வு செய்வது தொடர்பாக அங்குள்ள அல் சபா மாளிகையில் சவுதி அரசரின் வாரிசு குழுக் கூட்டம் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் உள்ள 43 உறுப்பினர்களில் 31 உறுப்பினர்கள் சல்மானுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். இதனை அடுத்து, சவுதியின் புதிய இளவரசராக சல்மான் நியமிக்கப்பட்டார். மேலும், சல்மான் தான் பொறுப்பு வகித்து வந்த பாதுகாப்புத்துறை அமைச்சர் பதவியையும் தக்க வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# பிலிப்பைன்ஸில் தொடர் மோதல்: பல பகுதிகளை இழந்தது ஐ.எஸ்.!




பிலிப்பைன்ஸின் தெற்கு நகரில் இடம்பெற்றுவரும் போரில், ஐ.எஸ். பயங்கரவாதிகள் கணிசமான பகுதிகளை இழந்துள்ளனர் என பிலிப்பைன்ஸ் இராணுவத் தரப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிலிப்பைன்ஸ்.மராவி நகரில் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கும், பிலிப்பைன்ஸ் இராணுவத்தினருக்கும் இடையில் போர் இடம்பெற்று வருகின்றது. இந்தப் போரில் இதுவரை சுமார் 350 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், போர் நிலைப்பாடுகள் தொடர்பில் நேற்றுப் புதன்கிழமை ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த பிலிப்பைன்ஸ் இராணுவ செய்தித் தொடர்பாளர் ஜோ-அர் ஹெரேரா-

'பயங்கரவாதக் குழுவின் கட்டுப்பாட்டில் மிகச்சிறிய பகுதியே உள்ளது. எனவே நாம் விரைவாக இந்தப் பகுதியை முற்றுகையிடுவோம். வெடிபொருள்கள், எரிபொருள் குண்டுகள் இந்தப் பகுதிகளில் இருக்கின்றமையால் எமது இராணுவத் தரப்பின் செயற்பாடுகள் தாமதமாகின்றன' எனத் தெரிவித்துள்ளார்.

**பாடசாலைக்குள் நுழைந்தனர் பயங்கரவாதிகள்**

இதேவேளை, பிலிப்பைன்ஸ் நாட்டின் தென் பகுதியில் மின்டானவோ தீவு உள்ளது. அங்குள்ள வடக்கு கோடோபடோ மாகாணத்தில் பிக்கவாயன் நகரம் உள்ளது. அங்குள்ள பாடசாலை ஒன்றுக்குள் நேற்றுப்புதன்கிழமை காலை திடீரென உள் நுழைந்த பயங்கரவாதிகள் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டை அடுத்து பின்வாங்கியுள்ளனர் என இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிலிப்பைன்ஸின் தெற்கு நகரில் அமைந்துள்ள பாடசாலைக்குள் உள்நுழைந்த பயங்கரவாதிகள் மாணவர்கள் சிலரையும், பொதுமக்களையும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர் என முன்னர் அறிவிக்கப்பட்டது.

எனினும், மாணவர்கள் எவரும் பணயக்கைதிகளாக பிடிக்கப்படவில்லை என்று பிரிகேடியர் ஜெனரல் ரெஸ்டிடோடோ பாட்டிலா தகவல் வெளியிட்டுள்ளார்.

எனினும், ரமழான் வார இறுதியில் இந்தப் பகுதி முற்றுகையிடப்படும் என்று நம்புகிறோம் என இராணுவத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## 5 வயதுச் சிறுமியின் திருமணக் கனவு பலிதம்!

ஸ்கொட்லாந்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஐந்து வயதுச் சிறுமியின் கனவை அவரது பெற்றோர்கள் நிறைவேற்றியுள்ளனர்.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த எலைட் பேட்டர்சன் (வயது-5). இவருக்கு புற்றுநோய் ஏற்பட்டுள்ளது. தற்போது அவர் தன் வாழ்நாளை எண்ணிக் கொண்டிருக்கிறார். இதனால், அவரது பெற்றோர்கள் எலைட் பேட்டர்சனின் திருமணக் கனவை நிறைவேற்றியுள்ளனர். இந்தச் சிறுமிக்கு திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை இருந்துள்ளது.

இதனால், அவரது நெருங்கிய நண்பரான ஹாரிசன் க்ரைர் (வயது-6) என்பவரை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திருமணம் செய்து வைத்து, அவரது ஆசையை நிறைவேற்றியுள்ளனர். இவர்களது திருமணத்தில் இதில் இரு வீட்டார் உட்பட 200 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியின்போது ஒரு சிலர் உணர்ச்சியை அடக்க முடியாமல் கண்ணீர் வடித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



கண்ணீரில் மிதந்தது மணமேடை




# விளையாட்டு அமைச்சரின் கருத்தால் விளையாட்டுத்துறையில் மாற்றம் ஏற்படுமா?

கொழும்பு, ஜூன் 22

உடல் தகுதி அறிக்கைகள் இல்லாமல் எவ்விதமான விளையாட்டு அணிகளுக்கும் ஒப்புதல் அளிக்கப் போவதில்லை என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளமை தற்பொழுது பலராலும் அதிகமாகக் கதைக்கப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இலங்கை கிரிக்கெட் வீரர்களின் தற்போதைய நிலை குறித்து குறை கூறிய அமைச்சர், சர்வதேச மட்டத்திலுள்ள கிரிக்கெட் வீரர்களுடன் ஒப்பிடும்பொழுது இலங்கை வீரர்களுடைய உடல் தகுதி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது என்றும் சுட்டிக் காட்டினார்.

அணியின் மோசமான களத்தடுப்பே நடைபெற்று முடிந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இருந்து இலங்கை அணி வெளியேறுவதற்கு முக்கிய காரணியாக இருந்தது.

இது குறித்து அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை விளையாட்டு சட்டங்களுக்கு அமைவாக எந்த அணியும் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டிகளில் பங்குபற்றுவதற்கு முன்னதாக விளையாட்டு அமைச்சரின் அனுமதியைப் பெற வேண்டும்.

இலங்கை அணியில் மட்டுமே அதிகளவான உடல் தகுதிக்கு மீறிய உடம்பை கொண்டுள்ள வீரர்கள் உள்ளனர். எனவே, பிடியெடுப்புகளை தவற விட்டதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. மேலும், களத்தடுப்பின் போது ஏற்பட்ட தவறுகளால் எவ்வளவு ஓட்டங்கள் எதிரணிக்கு தாரை வார்க்கப்பட்டது.

கடந்த காலங்களில் கிரிக்கெட் வீரர் ஒருவருக்கு ஓட முடியவில்லை என்றால், அவருக்குப் பதிலாக உதிரி வீரரொருவர் வழங்கப் பட்டார். எனினும் இப்போது அது நிறுத்தப்பட்டுள்ளது. அது மிகவும் நல்லது. ஏனெனில் அவரால் அரைச் சதம் பெறும் வரை கூட ஓட முடியாது என்றால், அவர் வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

இலங்கை கிரிக்கெட் வீரர்களைப் போன்ற வீரர்களை நான் எங்கும் கண்டதில்லை. ஏனெனில், ஒரு சிலரைத் தவிர ஏனைய வீரர்கள் அனைவரும் கட்டுக் கோப்பான உடலமைப்புடன் இல்லை .- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அரையிறுதி வரை முன்னேறியிருந்த பங்களாதேஷ் அணியை எடுத்துக் காட்டாகக் குறிப்பிட்ட விளையாட்டுத்துறை அமைச்சர், அவ்வணி வீரர்களின் உடலமைப்பு மற்றும் தொடர்ச்சியான பயிற்சிகள் குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உடல் எடை கூடிய பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு கடந்த வருடம் அங்குள்ள இராணுவப் பயிற்சி முகாமில் வைத்து இராணுவப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதன் பலனாக வீரர்கள் சிறந்த திறமையை வெளிப்படுத்த, கடந்தாண்டில் இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணி இரண்டு போட்டிகளில் வெற்றியீட்டியிருந்தது.

அது போன்றே இம்முறை சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் துடுப்பாட்டம், பந்து வீச்சு மற்றும் களத் தடுப்பு என அனைத்திலும் சிறந்த முறையில் செயற்பட்ட அவ்வணி வீரர்கள், அதிரடியாக ஆடி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி கிண்ணத்தையும் கைப்பற்றியுள்ளார்கள்.

இவ்வாறான ஒரு நிலையில், இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கும் இராணுவப் பயிற்சிகளை வழங்கி அவர்களது உடல்தகுதியை சீரான நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த விடயம் பல தரப்பினராலும் பல்வேறு விதத்திலும் கதைக்கப்படுகின்றது.

கிரிக்கெட் விளையாட்டைப் போன்றே இலங்கை மெய்வன்மை விளையாட்டு குறித்தும் அமைச்சர் பல விமர்சனங்களை வெளியிட்டுள்ளார்.

மெய்வன்மை வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் குறித்து அமைச்சர் தயாசிறி தெரிவித்தவை வருமாறு:-

நாம் ஒன்றை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். ஒலிம்பிக்கில் வெற்றியீட்டினோம் என்று ஒரு நாளும் ஒரு நல்ல பயிற்றுவிப்பாளராகிவிட முடியாது. நான் நன்றாக ஓடி தங்கப் பதக்கம் பெற்றேன் என்ற காரணத்துக்காக பயிற்சியளிக்க முடியாது. பயிற்றுவிப்பாளராக வர வேண்டுமென்றால் அவர் பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சிகளை முறையே பெற்றிருக்க வேண்டும்.

இலங்கையில், விளையாட்டின் தரம் குறைவதற்கு முதலாவது காரணம், இலங்கையிலுள்ள பயிற்றுவிப்பாளர்களின் சுயநலம் மற்றும் சிறந்த பயிற்றுவிப்பாளர்களாக வரக்கூடிய ஏனையோருக்கு உள்ள வழிகளை அடைத்து வைத்துள்ளமையும் பயிற்றுவிப்பாளர்களுக்குரிய போதிய கல்வி மற்றும் அதற்குரிய தகுதிகள் இல்லாமல் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்குதலுமாகும்.

சரியான பயிற்றுவிப்பாளர் இல்லாமையே. இலங்கையில் விளையாட்டு வீரர்கள் முன்னேறாமைக்கு காரணம். அதனால் நாங்கள் அங்கும் இங்கும் உள்ளவர்களை கொண்டு வந்து ஒலிம்பிக் வரை செல்லலாம் சென்று கனவு காண்கின்றோம். அப்படி செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு பலவகையான மாற்றங்களும், புதிய திட்டங்களும் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை உள்ளது.

அமைச்சரின் இந்த கடும் விமர்சனங்களுக்கு மத்தியில் இம்மாத இறுதிப் பகுதியில் ஸிம்பாப்வே அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டித் தொடரில் இலங்கை அணி விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய கூடைப்பந்து அணியில் யாழ். மாணவி பாபு பானு!

கொழும்பு, ஜூன் 22

இம்மாத இறுதியில் சீனாவின் செங்கோ நகரில் இடம்பெறவுள்ள சர்வதேச கூடைப்பந்து சம்மேளனத்தின் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான 3X3 கூடைப்பந்தாட்ட தொடருக்கான இலங்கை அணியினர் தம்மைத் தயார்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த காலங்களில் பாடசாலை மட்டங்களில் வெளிப்படுத்திய திறமைக்கு அமைய, யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி பாபு பானுவும் தேசிய அணிக்குத் தெரிவாகியுள்ளார்.

நீண்ட கால யுத்தத்திற்குப் பின்னரான தற்போதைய அணியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து அதிகளவான வீர வீராங்கனைகள் தேசிய மட்டத்தில் பல போட்டிகளில் பிரகாசிப்பதோடு, தம்மை தேசிய அணியில் பிரதிநிதித்துவப்படுத்தியும் வருகின்றனர்.

அந்த வரிசையில், தற்பொழுது இந்தக் கூடைப் பந்து அணியில் இணைவதன் மூலம் பானுவும் வடக்கிற்கு பெருமை சேர்த்தவர்கள் பட்டியலில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

சிறு வயது முதலே விளையாட்டில் ஆர்வம் கொண்ட பாபு பானு தொடர்ச்சியாக போட்டிகளை அவதானித்து வந்துள்ளார். இதன் காரணமாக கூடைப்பந்து விளையாட்டில் ஈர்க்கப்பட்ட அவர், தமது பெற்றோரின் விருப்பத்துடன் ஆறாம் தரத்தில்



படித்துகொண்டிருந்தபோது முதன் முதலாக கூடைப் பந்து விளையாட்டில் இணைந்துகொண்டார்.

எனினும், ஆரம்ப காலத்தில் அவருக்கு பாடசாலை அணியில் இடம் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறான ஒரு நிலையிலும், தனது ஆர்வம் மற்றும் கடும் பயிற்சிகளின் பயனாக தொடர்ந்தும் இந்த விளையாட்டில் இணைந் திருந்தமையால் பிற்காலத்தில் அவருக்கு அணியில் இடம் கிடைத்தது.

இதுதொடர்பில் பாபு பானு தெரிவித்தவை வருமாறு:-

கூடைப்பந்து விளையாடும் விதம் பிடித்திருந்தது. அதற்கமைய நான் ஆறாம் வகுப்பிலிருந்து கூடைப்பந்து விளையாடி வருகின்றேன். முதலில் அணியில் இணைக்கப்படவில்லை. பயிற்சிகளுக்கு மட்டும்தான் சென்று கொண்டிருந்தேன். என்னுடைய சகோதரிகள் எல்லோரும் விளையாட்டில் ஆர்வமுள்ளவர்கள். கல்வி மட்டுமல்ல விளையாட்டிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதே எனது இலக்கு. ஆனால் சில வேளைகளில் பயிற்சிகளின் பிரத்தியேக வகுப்புகளுக்கு போக முடியாமல் இருக்கின்றது.

எல்லோருடைய ஒத்துழைப்பும் கிடைக்கின்றமையால்தான் எனக்கு இந்த வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அத்துடன், என்னுடைய சொந்த முயற்சி மற்றும் பயிற்றுவிப்பாளரின் வழிகாட்டல்களின் மூலம் நான் இந்த அளவுக்கு வளர்ந்துள்ளேன்.

எதிர்காலத்தில் திறமைகளை மேலும் வளர்த்து சர்வதேச மட்டத்தில் சிறந்த திறமைகளை வெளிப்படுத்த எதிர்பார்த்துள்ளேன். - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் முடிவுக்கு கொண்டுவரப்படுகிறது!

டுபாய், ஜூன் 22

சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாக அதிகாரியான டேவிட் ரிச்சர்ட்சனின் கருத்தின்படி, இம்முறை நடைபெற்று நிறைவடைந்த தொடருடன் சம்பியன்ஸ் கிண்ண சுற்றுப்போட்டியை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை இடம்பெற்ற 2017ஆம் ஆண்டிற்கான சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதிக் கொண்டன.

இந்தச் சுற்றுப்போட்டி நிறைவடைந்து ஒரு வாரம் கூட கடக்காத நிலையில் இந்தச் செய்தி கிரிக்கெட் ரசிகர்கள் பலரையும் வியப்புக்குள்ளாக்கியுள்ளது. இரண்டு வருடங்களிற்கு ஒருமுறை இருபதுக்கு 20 உலகக் கிண்ண சுற்றுப் போட்டியை நடத்தவிருப்பதால் சர்வதேச கிரிக்கெட் கால அட்டவணையில் போதியளவு காலத்தை ஒதுக்கீடு செய்யும் நோக்குடன் இந்த முடிவு எடுக்கப்பட்டது எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், எட்டு அணிகளை உள்ளடக்கி நடத்தப்படும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை விடுத்து பத்து அணிகளை உள்ளடக்கி நடத்தப்படும் 2019 ஆம் ஆண்டிற்கான உலகக் கிண்ணத் தொடர் மீது அதிகாரிகள் அதிக கவனம் செலுத்தி வருகின்றமையும் இதற்கு ஒரு காரணமாகும்.

டேவிட் ரிச்சர்ட்சனின் கருத்தின்படி சர்வதேச சுற்றுப் போட்டிகளில் பல முக்கிய மாற்றங்களை கொண்டுவர எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற ஏற்பாடாகியிருந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் இடம் பெறுவதில் சந்தேக நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் வருடாந்த மாநாட்டின் போது டேவிட் ரிச்சர்ட்சன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

ஒரே முறையிலான சுற்றுப் போட்டிகளுக்கு பதிலாக பார்வையாளர்களின் ரசனைக்கு ஏற்ற வகையில் மாறுபட்ட விதத்திலான சுற்றுப் போட்டிகளை நடத்துவதே எமது நோக்கமாகும்.

எதிர்வரும் 2021 ஆம் ஆண்டிற்கான சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இத்தொடரிற்குப் பதிலாக நான்கு வருடங்களிற்கு ஒருமுறை நடைபெற உத்தேசிக்கப்பட்டிருந்த இருபதுக்கு 20 உலகக் கிண்ணப் போட்டிகளை இரண்டு வருடங்களிற்கு ஒருமுறை நடத்த ஆலோசித்து வருகின்றோம். அல்லாவிட்டால் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை இருபதுக்கு 20 போட்டிகளைக் கொண்ட தொடராக நடத்தவும் நாம் கலந்துரையாடி வருகின்றோம்.

இருபதுக்கு 20 போட்டிகளை பார்வையிடும் ரசிகர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் காரணத்தால் போட்டிகளை ஒளிபரப்பும் தொலைக்காட்சி நிறுவனங்களும் அதிக இலாபத்தை ஈட்டுகின்றன.

இதன் காரணமாக அதிக அணிகளை உள்ளடக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. எனவே, ஏறத்தாழ 20 அணிகளை உள்ளடக்கிய இருபதுக்கு 20 தொடர் ஒன்றை நடத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தி வருகிறோம்.

16 அல்லது 20 அணிகளைக் கொண்ட சுற்றுப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்வதில் நாம் ஆர்வம் காட்டி வருகின்றோம். இதேவேளை, 10 அணிகளை மாத்திரம் கொண்ட உலகக் கிண்ணப் போட்டியை நடத்துவதன் மூலம் பெரும்பாலான அணிகள் ஒரே மட்டத்தில் காணப்படுவதால் அணிகளுக்கிடையிலான போட்டித் தன்மை உயர் நிலையில் காணப்படும்.

எனவே, 50 ஓவர்களைக் கொண்ட மற்றுமொரு சுற்றுப் போட்டியை ஏற்பாடு செய்வது அவசியமற்றதாகவே காணப்படுகின்றது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்கின்றமை தொடர்பில் கலந்தாலோசிக்க சர்வதேச கிரிக்கெட் சபை அதிகாரிகள் நேற்று முன்தினம் லண்டனில் ஒன்று கூடியமையுடன், அது தொடர்பான இறுதி முடிவு விரைவில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தான் அணிக்கு உற்சாக வரவேற்பு!

கராச்சி, ஜூன் 22

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்திய அணிக்கு எதிரான இறுதிப்போட்டியில் அபார வெற்றிவாகை சூடிய பாகிஸ்தான் அணிக்கு அவர்களின் தாய்நாட்டில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

சர்ப்ராஸ் தலைமையிலான பாகிஸ்தான் அணியினர் கடந்த திங்கட்கிழமை சம்பியன்ஸ் கிண்ணத்துடன் நாடு திரும்பினர். அவர்களுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்தோடு வீதியோரங்களில் ரசிகர் கூட்டம் நிரம்பி வழிய பாக். அணி வலம் வந்துள்ளது.

# கோஹ்லிக்கும், எனக்கும் சுமுகமான உறவு இல்லை!

## கும்ளே கூறுகிறார்



லண்டன், ஜூன் 22

அணித் தலைவர் விராட் கோஹ்லிக்கும், பயிற்சியாளரான எனக்கும் சுமுகமான உறவு இல்லை என இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் கும்ளே தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகிய கும்ளே தனது டுவிட்டரில் ஒன்றில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக என்னை நீடிக்க வேண்டும் என கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டது. இது என் மீது உள்ள நம்பிக்கையின் காரணமாகும். இதை கௌரவமாக கருதுகிறேன்.

கடந்த ஓர் ஆண்டாக என்னால் சிறப்பாக சாதிக்க முடிந்ததற்காக அணித் தலைவர், அணி வீரர்கள் மற்றும் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் முறையாக நேற்று முன்தினம் என்னிடம் கிரிக்கெட் சபைத் தலைவர் பதவிக்குரிய தனித்தன்மைகள் பற்றி தெரிவித்தது. இது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. அணித் தலைவருக்கும், பயிற்சியாளருக்கும் இடையே உள்ள எல்லை பற்றி நான் எப்போதுமே மதிக்கக்கூடியவன்.

ஆனாலும், தலைவருக்கும், பயிற்சியாளருக்கும் இடையே நிலவிய தவறான புரிதல்கள் குறித்து தீர்த்து வைக்க கிரிக்கெட் சபை முயற்சித்தது. தலைவர் விராட் கோஹ்லிக்கும், பயிற்சியாளரான எனக்கும் சுமுகமான உறவு இல்லை. இருவரும் இணைந்து செயற்படுவது என்பது ஏற்றுக்கொள்ள இயலாது. இது வெளிப்படையாகவே தெரிந்தது. இதனால் நான் சிறந்த முடிவை எடுத்து இருக்கிறேன்.

கடந்த ஓர் ஆண்டாக பயிற்சியாளர் பதவியில் இருந்ததற்காக கிரிக்கெட் சபைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு ஆதரவு அளித்த ரசிகர்களுக்கும் நன்றியைக் கூற கடமைப்பட்டுள்ளேன்.- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே பயிற்சியாளர் பதவியில் இருந்து கும்ளே விலகியமை தொடர்பாக கிரிக்கெட் சபை கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# டோனி, யுவராஜ் எதிர்காலம் குறித்து தேர்வுக் குழு முடிவு செய்ய வேண்டும்!

## டிராவிட் தெரிவிப்பு

டில்லி, ஜூன் 22

இந்திய அணியின் மூத்த வீரர்கள் டோனி, யுவராஜ் சிங் ஆகியோரின் எதிர்காலம் குறித்து தேர்வுக் குழு முடிவு செய்ய வேண்டும் என்று ராகுல் டிராவிட் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ராகுல் டிராவிட் இணையத் தளம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை நோக்கி இந்திய அணியை முழு அளவில் தயார்படுத்த டோனி, யுவராஜ் சிங் (தலா 35 வயது) ஆகியோரின் சர்வதேச கிரிக்கெட் எதிர்காலம் குறித்த முடிவை அணித் தேர்வுக் குழுவும், நிர்வாகமும் எடுக்க வேண்டும். அதற்கு இதுவே சரியான தருணமாகும்.

அடுத்த சில ஆண்டுகளில் இவர்களின் பங்களிப்பு என்னவாக இருக்கும்? அணியில் இருவருக்குமே இடம் இருக்கிறதா, அல்லது ஒருவருக்கு மட்டும் தானா? இதற்கான மதிப்பீட்டை ஓர் ஆண்டு காலத்தில் செய்யப்போகிறோமா அல்லது 6 மாத காலத்தில் செய்யப் போகிறோமா? அதற்கு முன்பாக திறமையான புதிய வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப் போகிறோமா? அது பற்றி எல்லாம் முடிவு செய்ய வேண்டியது அவசியமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

## அற்புதங்கள்....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

1840 ஆம் ஆண்டளவில் கட்டி முடிக்கப்பட்டுக் குடமுழுக்குச் செய்யப்பட்ட ஆலயத்துக்கு நித்திய, நைமித்திய பூசைகளைக் கவனிப்பதற்கெனக் காஞ்சியிலிருந்து வரவழைக்கப்பட்ட திம்மசேனா என்னும் பிராமண உத்தமர் நியமிக்கப்பட்டார். இவரைத்தொடர்ந்து புங்குடுதீவிலிருந்து வந்து அராலியில் குடியேறிய சரவணை ஐயர் என்பவர் பூசைகளைக் கவனித்து வந்தார் என்று அறியக்கிடக்கின்றது.

இந்த ஆலயத்திற்குச் சுதுமலையைச் சேர்ந்த முத்துநகலிங்கம் என்பவரால் 1905 - 1909 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மூன்று தளங்களைக் கொண்ட கோபுரம் ஒன்று சோழர் காலச் சிற்ப மரபை ஒட்டி அமைக்கப்பெற்றது. அந்தக் கோபுரம் இப்போது ஐந்து தளங்களைக் கொண்டதாக மாற்றியமைக்கப்பட்டு காட்சியளிக்கிறது. ஆலயத்தின் முன் பாகத்திலுள்ள ஊஞ்சல் மடமும் அன்னாராலேயே கட்டப்பட்டது. ஆலயத்தின் காண்டா மணியும் மணிக்கூட்டுக் கோபுரமும் 1946 ஆம் ஆண்டு சிதம்பரநாதர் பொன்னையா என்பவரால் பொதுமக்களின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டது.

இந்த ஆலயத்தின் ஆறுமுகப் பெருமானுக்கு 1976 ஆம் ஆண்டளவில் சித்திரத்தேர் ஒன்று வல்லிபுரம் சுப்பையா என்பவரால் ஊர்மக்களின் உதவியுடன் இனிதாக அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் இளந்தொண்டர் சபையினரால் 1977 ஆம் ஆண்டளவில் ஊர்மக்களின் பேருதவியுடன் அரிய சப்பறமும் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் வேட்டைத் திருவிழாவின்போது எம்பெருமான் பவனிவரும் சிவப்புக் குதிரை வாகனம் ஏறத்தாழ 100 ஆண்டுகள் பழமைவாய்ந்தது.

தற்போது இந்த ஆலயம் 2 மணிக்கோபுரங்களையும் 5 தளங்களைக் கொண்ட இராசகோபுரத்தையும் கொண்டு புதியதோர் பரிமாணத்தில் காட்சியளிக்கிறது.

எம்பெருமானாம் சுப்பிரமணியச் செவ்வேளுக்கு அன்று தொடக்கம் இன்றுவரை பாவலர்கள் பாமாலை புனைந்த வண்ணமும் ஆடல்வல்லோர் எம்பெருமானுக்குக் காவடி எடுத்து ஆடிய வண்ணமும் இசையாளர் எம்பெருமான் புகழை இனிமைததும்ப இங்கிதமாகப் பாடியவண்ணமும் உள்ளனர்.

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பதவிகளை இராஜினாமாச் செய்தமையை அடுத்து அந்த அமைச்சர் பதவிகளையும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் ஆளுநர் றெஜினோல்ட் குரே முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற எளிமையான வைபவத்தில் புதிய அமைச்சுகளை முதல்வர் விக்னேஸ்வரன் பொறுப்பேற்றார்.

இந்த நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம், கே.சர்வேஸ்வரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (உ)

## நம்பிக்கையில்லா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் நேற்றுத் திரும்பப் பெற்றுக்கொண்டனர்.

வடமாகாணசபை உறுப்பினர்களான கேசவன் சயந்தன், அயுப் அஸ்மின் ஆகியோர் இணைந்து ஆளுநரிடம் சென்று அந்தப் பிரேரணையை மீளப் பெற்றுக் கொண்டனர்.

இந்த மீளப் பெறுகையுடன் வடக்கு மாகாண சபையில் ஏற்பட்ட அரசியல் பதற்றம் ஒருவாறு தீர்க்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. (உ)

## யாழ். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர் தீபாலி விஜேசுந்தர, லலித் ஜயசூரிய ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு ஆயமே இந்த உத்தரவை வழங்கியிருந்தது.

யோகன் பிரியதர்ஷனி என்பவரைக் கொலை செய்த குற்றத்துக்காகக் கொடிகாமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் 2010 ஒகஸ்டில் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கியிருந்தது.

கொலை நடந்த சமயத்தில் கொலையாளிக்கு வயது 16. தீர்ப்பு வழங்கப்பட்ட சமயத்தில் அவருக்கு வயது 25.

எனினும், 16 வயதில் இழைக்கப்பட்ட ஒரு குற்றத்துக்காக மரண தண்டனை வழங்க முடியாது எனத் தெரிவித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், மேற்படி மரண தண்டனைத் தீர்ப்பைத் தள்ளுபடி செய்தது.

இந்த வழக்கின் எதிரி தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதியின் வழிகாட்டலைக் கோருமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (உ)

## சுமுக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னர் கருத்து வெளியிடுகை யிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இரு அமைச்சுக்களும் தொடர்ந்து சுமுகமாக இயங்குவதற்கு வசதியாக அவற்றைத் தாம் பொறுப்பேற்றுள்ளார் என்று கூறிய முதலமைச்சர், அந்த இடங்களுக்குப் புதிய அமைச்சர்களை நியமிக்கின்றமை குறித்துத் தாம் இதுவரை முடிவு ஏதும் எடுக்கவில்லை என்றும் கூறினார். (உ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர்.சி.வி.விக்னேஸ்வரன், சுகாதார அமைச்சர் மருத்துவர் எஸ்.சத்தியலிங்கம், போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் ஆகியோரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கடந்த 14 ஆம் திகதி முதலமைச்சருக்கு எதிராக ஆளும் தரப்புக்குள் வெடித்த குழப்பங்களின் பின்னர் சம்பந்தப்பட்ட இரு அமைச்சர்களும் முதலமைச்சரை நேருக்கு நேர் சந்தித்தமை இந்த அமைச்சர் வாரியக் கூட்டத்தின் போதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார அமைச்சுக்கு முன்னால் வந்தபோது, பேரணியில் ஈடுபட்டவர்கள் சுகாதார அமைச்சுக்குள் அத்துமீறி உள்நுழைந்து அதன் முகப்புக் கட்டடத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். இதனையடுத்தே பொலிஸார் தண்ணீர்த் தாரை பிரயோகம் மற்றும் தடியடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன்போது காயமடைந்த 96 பேர் தற்போது தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒருவர் பலத்த காயமடைந்திருக்கிறார் என மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட மாணவ சங்கங்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.

மாலபேதனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நடத்தத் திட்டமிடப்பட்ட இந்த எதிர்ப்புப் பேரணியைப் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படாதவாறு முன்னெடுக்குமாறு முன்னதாக கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீதியில் இளைஞன் கைது: வீட்டில் இருந்து கஞ்சா மீட்பு

### வவுனியா - நெளுக்குளத்தில் சம்பவம்

வவுனியா, ஜூன் 22

வவுனியாவில் நேற்று கஞ்சாவுடன் இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டார் என வவுனியா தலைமைப் பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா - நெளுக்குளத்தைச் சேர்ந்த 23 வயதான இளைஞன் ஒருவரே கைது செய்யப்பட்டார்.

இந்த இளைஞன் கஞ்சா வியாபாரம் செய்பவர் எனவும் அது தொடர்பாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே வீதியில் வைத்து கஞ்சா பொதி ஒன்றுடன் அவரைத் தாங்கள் கைது செய்தனர் எனவும் பொலிஸார் கூறினர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து வீட்டில் இருந்து 200 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார் எனவும் பொலிஸார் கூறினர். (ம)

# பாலைப்பழம் பிடுங்கச் சென்றவர் யானை தாக்கி உயிரிழந்தார்

### வவுனியாவில் நேற்றுச் சம்பவம்

வவுனியா செட்டிக்குளம் மெனிக் பாம் காட்டுப் பகுதியில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்தார். நேற்றுக்காலை 10.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த முத்துக்கருப்பன் குமாரவேல் (வயது - 55) என்பவரே உயிரிழந்தார்.

இவர் தனது நண்பருடன் நேற்று பாலைப்பழம் பிடுங்குவதற்காக காட்டுப்பகுதிக்கு சென்றுள்ளார். அங்கு பாலைப்பழம் பிடுங்கி கொண்டிருந்தபோது திடீரென வந்த யானை தாக்கியதால் அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் வவுனியா செட்டிகுளம் பொலிஸார் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் உதவியுடன் சடலம் மீட்கப்பட்டது. (ம)

## குற்றம்....

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

யினர் என்று தெரிந்தும் தயக்கம் ஏன்? தமிழ் மக்களை இந்த நாட்டு மக்களாக இந்த அரசோ, அல்லது கடந்த அரசுகளோ கருதியிருந்தால் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகவும் தகுதி - தராதரம் பாராமல் தவறு செய்தவர்களைத் தண்டித்திருப்பீர்கள். ஆனால், இந்தச் சிறிய தீவின் பிரஜைகளாக தமிழ் மக்களை நீங்கள் கருதவில்லை என்பதால்தான், அவர்களுக்கு நிகழ்ந்த அநீதிகளுக்கு எதிராக வாய்மூடி இருக்கின்றீர்கள்.

**மக்களின் போராட்டம்**

வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி நகரிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் அந்த மாவட்டத்தின் மாவட்டச் செயலகம் முன்பாகவும், வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரிலும், திருகோணமலை மாவட்டத்தில் ஆளுநர் அலுவலகத்தின் முன்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகள் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களது போராட்டங்கள் நூறு நாள்களையும் கடந்து விட்டது. தங்களுக்கான தீர்வு கிடைக்கும்வரையில் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்ற ஓர்மத்துடன் அவர்கள் போராடி வருகின்றனர். இதுவே தென்பகுதியில் நடந்திருந்தால், போராட்டம் தொடங்கி சில மணி நேரத்திலேயே அரசின் தலைவர்கள் ஓடோடிச்சென்று அவர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருப்பீர்கள்.

**உதட்டளவில் மட்டுமே நல்லிணக்கம்**

நீங்கள் உதட்டளவில் மாத்திரம்தான் நல்லிணக்கம் பேசுகின்றீர்கள் என்பதற்கு இதை விட எளிமையாக வேறு வகையில் சொல்ல முடியாது.

இறுதியாக ஒரு விடயம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விடயம் விரைந்து தீர்க்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. ஆனால், இதில் பாதிக்கப்பட்டவர்கள், நீங்கள் நிறுவும் இந்த அலுவலகத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தயாரில்லை.

ஆகவே, இந்த அலுவலகம் நிறுவப்பட்டு அதன் நோக்கம் வெற்றியடைய வேண்டுமானால், காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகள் விரும்பும் வகையிலான விசாரணைப் பொறிமுறை உள்ளடக்கப்பட வேண்டும். அதை இந்தச் சபையில் கோருகின்றேன். - என்றுள்ளது. (உ)

## ஞானசாரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றில் சரணடைந்தமையை அடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனாலும் அதன் பின்னரும் அவர் நேற்று இரண்டு தடவைகள் அடுத்தடுத்துக் கைதானார். ஒவ்வொரு தடவையும் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஜாதிக பலசேனா நடத்திய செய்தியாளர் மாநாட்டுக்குள் புகுந்து குழப்பம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கில் நீதிமன்றில் ஆஜராகத் தவறியமைக்காக கடந்த 15 ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜெயரட்ண அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்திருந்தார்.

நேற்றுக்காலை அவர் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தார். அவரைப் பிணையில் விடுவித்த நீதிவான் ஒகஸ்ட் 9 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

அதன் பின்னர் திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுக்கும் பொலிஸ் பிரிவின் முன்னால் அவர் ஆஜரானார். அப்போது அந்தப் பிரிவினால் கைது செய்யப்பட்ட அவர் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் இனங்களுக்கு இடையில் குழப்பத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் திரும்பவும் கைதான ஞானசார தேரர் அதே நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அவரைப் பத்தாயிரம் ரூபா காசுப் பிணையிலும் இருவரின் ஐந்து லட்சம் ரூபா உறுதிப் பிணையிலும் செல்வதற்கு நீதிவான் அனுமதி அளித்தார். (உ)

## காணாம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

"காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் இயங்குவதற்கு ஏழு ஆணையாளர்கள் அவசியம். அது தொடர்பான சட்டமூலம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்டது. அந்தப் பணியை அரசமைப்புக் கவுன்ஸிலில் முன்னெடுப்பதற்கு தடை ஏதும் இல்லை. அப்படியிருக்கையில் ஏன் அதைச் செய்யாது தாமதக்கின்றீர்கள்?

"இந்த அலுவலகம் எந்த அமைச்சின் கீழ் வரும் என்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை இனித்தான் ஜனாதிபதி விடுக்க வேண்டும்.

அதன்பின்னர்தான் எந்த அமைச்சின் கீழ் இது செயற்படும் என்பது நமக்குத் தெரியும்.

"ஆனால் மேற்படி அலுவலகத்திற்கான ஏழு ஆணையாளரை நியமிப்பது அரசமைப்புக் கவுன்ஸிலின் பணி. கவுன்ஸில் எந்தத் தலையீடுமின்றி இந்தப் பணியை ஏற்கனவே எடுத்திருக்கலாம். எடுத்திருக்க வேண்டும். ஏன் செய்யாமல், இழுத்தடிக்கின்றது?" -- இவ்வாறு கேள்வி எழுப்பினார் சுமந்திரன் எம்.பி. (உ)

## மாகாண சபை இன்று கூடுகிறது

கடந்த ஒரு வாரத்துக்கு மேல் வடக்கு மாகாண சபையை ஒட்டி எழுந்த அரசியல் புயல் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு அடங்கிய நிலையில், இன்று காலை 9 மணிக்கு சபை கூடுகிறது.

பெரும்பாலும் இன்று ஆளும் தரப்புக் குழுக்கள் தங்களுக்குள் மோதலைத் தவிர்த்து அமைதி பேணும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## அரச வைத்தியர்கள் இன்று பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜூன் 22

அரச வைத்தியர்கள் இன்று காலை 08.00 மணி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சயிட்டம் நிறுவனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்கு தாக்குதலைக் கண்டித்து அவர்கள் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளனர் என நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

சயிட்டம் நிறுவனத்திற்கு எதிராக நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டதில் சுமார் 91 பேர் வரை பாதிக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நாட்டில் மீளவும் தலைதூக்கியுள்ளன இன பேத, மத பேத, வெறித்தனங்கள்

## இலங்கை மெதடிஸ்த சபை கவலை

கொழும்பு, ஜூன் 22

இனபேதம் மற்றும் மத பேதம், வெறித்தனங்கள் நாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ளன என இலங்கை மெதடிஸ்த திருச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

பத்து வருடங்களாக எமது தேசத்தை ஆட்டிப்படைத்த இன பேதம் மற்றும் மதபேதம் வெறித் தனங்கள் தொடர்பில் மனம் வருந்துவதாகத் தெரிவித்துள்ள அந்தச் சபை, 2015இல் உருவான நல்லாட்சி அரசின் செயற்பாடுகளால் அவை இல்லாதொழிந்து போகும் என்று எதிர்பார்த்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மெதடிஸ்த திருச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

புதிய அரசின் நேர்மையான நோக்கின் மூலமாகவும் ஓரளவேனும் இந்த விடயங்கள் சீர்ப்படுத்தப்பட்டுள்ளன என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

சர்வ மதங்களும் ஒன்றிணைந்து நாட்டில் உயர்ந்த மனித நேயத்தை கட்டியெழுப்பும் பணியை செய்ய வேண்டும்.

மதவெறி பிடித்த அந்தக் குழுவினர் பல சந்தர்ப்பங்களில் எமது ஆராதனைகளில் இடைபட்டு குழப்ப நிலையை உருவாக்கியுள்ளனர். மெதடிஸ்த விசுவாசிகள் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த சந்தர்ப்பங்களை தெனியாய, ஹபரணை, பிலியந்தல, கெக்கிராவ, இனிதும ஆகிய சபைகளில் நடைபெற்ற சம்பவங்களைக் கொண்டு காணக்கூடியதாக உள்ளது.

அந்த இடங்களில் பிக்குமார்களின் தலைமையில் சில குழுவினர் மூலமாக எமது ஆராதனைகளில் புகுந்து இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளனர். அத்தோடு குறிப்பிடத்தக்க எமது சபை அங்கத்தவர்கள் இருந்த போதிலும் எமக்குச் சொந்தமான சட்டரீதியான காணிகளில் அரச உத்தியோகத்தர்களிடம் சரியான அனுமதியைப் பெற்று ஆலயங்களை நிர்மாணிக்கும் போது கூட அவ்வாறான குழுவினர் மூலம் எந்தவிதத்திலும் நியாயமற்ற விரோதங்களை முன்வைத்து பல இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளனர்.

காலாதிகாலமாக இடம்பெற்ற பிரகாரமாக சகல மதத்தவர்களுக்கும் தங்களுடைய மதங்களை வழிபடுவதற்கு சிறந்த சூழ்நிலைகள் எமது தேசத்தில் மேலும் நிலைத்திருக்க வேண்டுகின்றோம்.-என்றுள்ளது. (எ)

## நாளை மின் தடை



உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை-

காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில் பள்ளங் கோட்டைப் பகுதியில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

## இசைப்பேழை வெளியீடு

வேலணை, ஜூன் 22

புளியங்கூடல் செருத்தனைபதி ஸ்ரீ இராஜமகாமாரி அம்மன் புகழ்பாடும் 'சூலம் ஏந்திய தீ விழியாள்' பக்தி இசைப்பேழை வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய முன்றிலில் இடம் பெறும்.

தாய் சக்தி கலைக்கூடம் வழங்கும் இப் பக்தி இசைப் பேழையில் உள்ள பாடல்களை கவிஞர்களான வீரமணி ஐயர், வேலணையூர் சுரேஷ், தீபிகா சுப்பிரமணியம் ஆகியோர் இயற்றி உள்ளனர்.

பாடல்களைத் தென்னிந்தியப் பிரபல பாடகர்கள் பாடியுள்ளனர். தென்னிந்திய இசையமைப்பாளர் அ. இலக்கியன் இசையமைத்துள்ளார்.

## நாவாந்துறைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நாவாந்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படும்.

இதன்படி, நாளை வெள்ளிக்கிழமை:

★ காலை 9 மணி முதல் 11 மணி வரை - சனசமூக நிலையம். சூரிய ஒளி.

★ முற்பகல் 11 மணி முதல் ஒரு மணிவரை சனசமூக நிலையம் - சென் நிக்கிலஸ்.

★ பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணிவரை -கோவில் ஒழுங்கை- நாவாந்துறை

வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட ஊடகர்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்!

### கடத்தப்பட்டு சித்திரவதைக்குள்ளான ஊடகவியலாளர் போத்தல ஜயந்த வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 22

வடக்கு, கிழக்கில் கொல்லப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்காக ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றை நியமித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட ஊடகவியலாளர் போத்தல ஜயந்த தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு நோக்கம் கருதி நாட்டைவிட்டு வெளியேறியிருந்த நிலையில், தற்போது நாடு திரும்பியுள்ள அவர் நேற்று முன்தினம் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச நிறுவனங்களில் நடைபெற்ற லஞ்ச ஊழல் தொடர்பாக பிரசித்தமாக கருத்துக்களை வெளியிட்டேன். அதனால் என்னை அரச ஊடகங்கள் தேசவிரோதியாகச் சித்திரித்தன.

விடுதலைப்புலிகள் நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் அவர்களை அழித்தவர்கள் அனைவரும் இராணுவ வீரர்கள் இல்லை. புலிகளை அழித்த வீரர்களாக நினைத்து இராணுவ உடையில் கொலை கொள்ளை கடத்தலில் ஈடுபட்டவர்களை விடுதலை செய்யவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் செய்த தவறு என்ன? பேனையைக் கையில் ஏந்தியது தான் நான் செய்த தவறா? நான் கடத்தப்பட்டு வருடங்கள் கடந்துள்ளன. என்னைக் கடத்தி சித்திர வதை செய்தமைக்கு எதிராக இதுவரை எவ்வித விசாரணை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.- என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## 'யாவரும் கேளீர்' நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஒக்ரோபர் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக வெளியிடப்பட்ட சிவ.ஆரூரனின் 'யாவரும் கேளீர்' எனும் நூல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இதில் மதிப்பீட்டுரைகளை எழுத்தாளர்களான ஜ. சாந்தன் மற்றும் சி.கருணாகரன் ஆகியோர் நிகழ்த்துவர்.

## தேசிய அரசை கவிழ்க்க களமிறங்கும் ஜே.வி.பி.

### முதலாவது ஆர்ப்பாட்டம் இன்று என்கிறார் ரில்வின்

கொழும்பு, ஜூன் 22

தேசிய அரசைக் கவிழ்ப்பதற்கான முதலாவது ஆர்ப்பாட்டம் இன்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட வுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைத் தூக்கி எறிந்ததைப் போன்றே, இந்த ஆட்சியையும் ஜே.வி.பி தூக்கியெறியும் என்று அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரை யாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசால் விடுக்கப்பட்ட தேர்தல் தொடர்பான உறுதியின் நேர்மறையான நடவடிக்கை, மக்களது உரிமைகளை ஒடுக்கியமை போன்றவையாலேயே, இந்த அரசின் ஆட்சியை இல்லாது செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. எனவே, இதற்கான முதலாவது மக்கள் ஆர்ப்பாட்டம், விஹாரமாதேவி பூங்காவில் இடம்பெறும்.

தேசத்தை அபிவிருத்திச் செய்வோம் என்றும் அரச சொத்துகளை துஷ்பிரயோகம் செய்தவர்களைத் தண்டிப்போம் என்றே, அரசின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால்,கூறியவற்றை செய்யாமல், நாட்டின் பொருளாதாரம் மந்தமாகியுள்ளதோடு, எந்தவொரு செயற்பாட்டையும் முன்னெடுக்காது, கொள்ளைக் கூட்டங்களைப் பாதுகாத்து வருகின்றது. -என்றார். (எ)

## காலமாறு நீதிப்பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் அவசியம்

### குளோபல் தமிழ் போரம் தெரிவிப்பு




காலமாறு நீதிப் பொறி முறையில் சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு அவசியமானது என்று லண்டனை மையமாகக் கொண்டு இயங்கி வரும் குளோபல் தமிழ் போரம் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையின் நீதித்துறை தொடர்பில் அண்மையில் ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதியான மொனிக்கா பின்டோ, கடுமையான விமர்சனங்களுடன் கூடிய அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து குளோபல் தமிழ் போரம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சர்வதேச நீதி பதிகளின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது என்று சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் சர்வதேச சமூகமும், இலங்கை அரசும் கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் பக்கச்சார்பற்ற, நம்பகமான காத்திர மான காலமாறு நீதிப்பொறி முறைமை உருவாக்கப்பட வேண்டும். அதற்கு சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பும் அவசியமானது என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் நீடித்து நிலைக்கக்கூடிய சமாதான முனைப்புகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

## கரவெட்டியில் இரத்ததான முகாம்

கரவெட்டி, ஜூன் 22

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு இரத்த தான முகாம் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும்.

குருதிக் கொடை நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துபங்களிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நரசிங்க சித்தர் சுவாமிகளின் திருவுடல் சமாதி வைக்கப்பட்டது





சுழிபுரம்,ஜூன் 22
சிவபதமடைந்த சிவத்திரு நரசிங்க சித்தர் சுவாமிகளின் திருவுடல் நேற்றுப்புதன்கிழமை அவரது சீடர்கள், பக்தர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் சம்புநாத ஈச்சரத்தில் சமாதி வைக்கப்பட்டது.

சுழிபுரம் - சம்பில்துறை சம்புநாத ஈச்சரத்தின் தர்மகத்தா நரசிங்க சித்தர் சுவாமிகள் நேற்று முன்தினம் சிவபதமடைந்தார்.

அவரது திருவுடலுக்கு நேற்று ஆலய வளாகத்தில் யாகக் கிரியைகள்நடைபெற்றன. சித்தரின் சீடர்களும் பக்தர்களும் இணைந்து இந்தயாகக் கிரியைகளை நடத்தி வைத்தனர். இதைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் அவரது திருவுடல் சமாதி வைக்கப்பட்டது.

நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞானசம்பந்ததேசிக பரமாச்சார்ய சுவாமிகளும் இதில் கலந்துகொண்டார். (மு)

## ஞானசார தேரர் கைது விடயத்தில் இயலாமையை ஏற்கும் பொலிஸ்

கொழும்பு, ஜூன் 22
நான்குவிசேடபடையணிகள் மூலம் மூன்று வாரங்களாக மேலாக நாடெல்லாம் தேடியும் ஞானசார தேரரை கைது செய்ய முடியாமல்போனமைதொடர்பில் தங்கள் இயலாமையைப் பொலிஸார் ஏற்றுக்கொள்கின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயகொடி குறிப்பிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம் ஞானசாரரிடம் வாக்குமூலம்பெற்றுநீதிமன்றில் ஒப்படைத்த பொலிஸார் அவருக்குப் பிணை வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காதமை குறித்து கடும் விசனம் வெளியிட்ட நீதிபதி புத்திக ஸ்ரீராகல, பொலிஸாரைக் கடிந்து கொண்டுள்ளார் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ)

## இலங்கை பல்கலை மாணவி மீது பங்களாதேஷில் பாலியல் பலாத்காரம்

கொழும்பு, ஜூன் 22
பங்களாதேஷில் இலங்கை யுவதி ஒருவர் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்டார் என்று கூறப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில் அந்த நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் ஊடகங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

பங்களாதேஷின் சிட்டங்கொங்கில் உள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் அந்த யுவதி கல்வி கற்று வருகின்றார்.

இந்த நிலையில், அவரைப் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தியவர் எனக் கூறப்படுபவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குல்ஷி பகுதியில் உள்ள குல்ஷி மார்ட் சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியான 26 வயதுடைய இளைஞனே இவ்வாறு சிறைவைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு குல்ஷி பகுதியில் உள்ள விடுதியொன்றில் வைத்து தாம் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்டார் எனப் பாதிக்கப்பட்ட யுவதி குல்ஷி பொலிஸில் கடந்த திங்களன்று முறைப்பாடு செய்துள்ளார்.

இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (உ)




## காணாமல்போனோர் அலுவலக சட்ட மூலம் நேற்று நிறைவேற்றம்

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தை அமைத்தல், அதனைக் கொண்டு செல்லல் தொடர்பாக மறுசீரமைக்கப்பட்ட சட்ட மூலம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட் டது.

யாராவது ஒருவர் காணாமல் போனார் என இந்த அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டவுடன், அது தொடர்பான விசாரணையை முன்னெடுத்தலை இந்த அலுவலகம் மேற்கொள்ளும்.

விசாரணையின் முடிவில் காணாமற்போனவர் தொடர்பான சான்றிதழையும்இக்காரியாலயம் வெளியிடும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (உ)

## அமெரிக்கா கண்டனம்

மதஸ்தலங்கள் மற்றும் வழிபாட்டு இடங்கள் மீதான தாக்குதல்கள் - அவை எங்கு நடந்தாலும் - இலங்கையில் என்றாலும், அமெரிக்காவில் என்றாலும் - கண்டிக்கத்தக்கவை.

- இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஸாப் மட்டக்களப்பில் ஒரு நிகழ்வில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

## ஞானசாரர், சிவாஜிலிங்கம், ரிஷாத் ஆகியோருக்கு எதிராக விசாரணை

### இன, மத நல்லிணக்கத்தைக் குழப்பினர் என்கிறது பொலிஸ்

கொழும்பு, ஜூன் 22
இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டனர் என்று கூறப்படுகின்றமை தொடர்பில் வண. கலகொட அத்த ஞானசார தேரர், அமைச்சர் ரிசாத் பதியூதீன், வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு எதிராக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிடுகையில் -

"இன, மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் கருத்து வெளியிட்டார்கள் எனக் கிடைத்துள்ள 21 முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

"அவ்வாறானவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் அடங்கிய குரல் பதிவுகளை ஊடக நிறுவனங்களிடம் இருந்து பெற்று விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அது தொடர்பான விடயங்கள் நீதிமன்றத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.

"இதனைதவிர கடந்தமேமாதம் 16 ஆம் திகதி முதல் மத வழிபாட்டுத் தலங்கள், வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்." - எனவும் பிரியந்த ஜயகொடி தெரிவித்துள்ளார். (மு)

## மான், மயில் இறைச்சிகளுடன் புத்தளம் பகுதியில் 6 பேர் கைது

புத்தளம்,ஜூன் 22
மான் இறைச்சியுடன் நால்வரும் மயில் இறைச்சியுடன் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்களுக்குக்கிடைத்தஇரகசியத் தகவலை அடுத்து, புத்தளம் செல்லம்குந்தல் காட்டுப் பகுதியில், நேற்றுக் காலை திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டபோதே, மான் இறைச்சி யுடன் நால்வர் கைதுசெய்யப் பட்டனர் என புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து 35கிலோ கிராம் மான் இறைச்சி கைப்பற்றப்பட்டது. இறைச்சியாக்கப்பட்ட மானின் உடற்பாகங்களும் மீட்கப்பட்டன.

அவர்கள் 4 பேரையும் கைது செய்துகொண்டுதிரும்பும்போது



கிடைத்த தகவலையடுத்து, கல்லடி, மதுரகம பகுதியில், மயிலை இறைச்சியாக்கி சமைத்துக் கொண்டிருந்தஇருவரைத்தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மயிலைக் கொலைசெய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட போரோ 12 துப்பாக்கியையும் தாங்கள் மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெயில் காலம் என்பதால், உணவு மற்றும் தண்ணீர் தேடி வரும் காட்டு விலங்குகளே இவ்வாறு கொல்லப்பட்டு, இறைச்சியாக்கப்படுகின்றனஎனப்பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் 6 பேரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 6728 கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.